அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page . No . 313

மலர் 4	நந்தன ஹு ஐப்பசி.மீ	வருட
இதழ் 7	அக்டோபர்—நவம்பர்—1952	சந்தா
விலை அ.4		ரூ. 2-4-0

ACC . No . 18581.



தக்கன் பரமசிவனை இழிவாய்ப் பேசியதால், திரு நந்திதேவர் பிரம்மாவினுடைய யாகத்தினின்று விலகிப்போதல்

(கந்தபுராணச் சித்திர விளக்கம்—41)

ஸ்ரீ

பொருளடக்கம்

			பக்கம்
பாரத ரஸம்	(திருப்புகழ் மணி)	...	289
கல்வியக் கோடர்	(ரசபதி)	...	294
பாடும் பணி	(சி. பிருந்தாதேவி)	...	308
சேக்கிழார் செய்தது	(இளவழகனார்)	...	313
ஆத்ம போதம்	(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன்	...	319
முருகப்பாச்சாரி	(வ. சு. செங்கல்வராயப் பிள்ளை)	...	323
கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்)	...	325
சென்னை தொண்டர் குழாம் திருவருணை யாத்திரை		...	332
9. Mother	(Thiruppugal Mani)	...	334

கர வருஷ பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப் பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணு 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும். வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன் கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா இலங்கை உள்பட உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0 4 வருட சந்தா ரூ. 11—0—0.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 - POST BOX: 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்விக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்; சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ௵ ஐப்பசி ௴ அக்டோபர்—நவம்பர் 1952	இதழ் 7

பாரத ரஸம்

பகுதி—(12)

முருக தத்துவத்தை வளர்க்கும்போது அருண கிரியார், அபேத பேதமோடு உலகாய் வளர்வதுவும் முருகன் தான் - ஒன்றே நீ - என்றார்.

உலகில் காணப்படும் எண்ணரிய பொருள் களில் அபேத ஒன்றாய் நிற்கும் தத்துவம் முருகன்- தெய்வம். பேத உலகில் மறைந்து நின்று விளை யாடுவது—தெய்வம். உலக ஸ்ருஷ்டி ஓர் கண்ணும் பூச்சி ஆட்டம். விஜேத மயமான, மாயா மயமான பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து அதனுள் எங்கும் பரந்து மறைந்து நிற்பது கடவுள் தன்மை. இதைக்

அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே.

கண்டு பிடித்துத் தேக்கித் திளைத்து ஆனந்தக் கடலில் சுகிப்பவர்கள் தொண்டர்கள்.

'உண்டுடுத்துப் பூண்டு இங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே'

என்றார் தாயுமானர்.

ப்ரம்மமே மறைந்து விளையாடுவதால், மானிட புத்தியும் அதன் நிழலைப்போல் இறைவன் விளையாடும் வகையை அறியாமல், மறைந்த பொருளை வெளிப் படுத்தியும், வெளிப் பொருளை மறைத்தும் அசட்டு விளையாட்டாக வாழ்க்கையைச் செலுத்துகின்றது. திருடி மறைத்தும், மறைத்து வைத்து இருக்கிற பிறர் பொருள்களை வெளிப்படுத்தியும் மனம் முயற்சிகள் செய்கின்றது. ஆசாபாச காமாதிகள், ஆணவம், கொடூரம் இவைகள் ஏற்பட்டால் மறைத்தும் வெளிப்படுத்தியும் தானே பிழைக்க வேண்டி யிருக்கின்றது.

குணதோஷத்தாலும், பிறர் பொருள்களை அபகரிக்கக் கருதியும், மறைவை நாடும் மாந்தர்போல் அல்லாது, ஆண்டவன்போல் கவிகள் விளையாடுவார்கள். உலகின் கண் மறைந்து கிடக்கும் தெய்வத்தை வெளிப்படுத்தியும், அரும் பெரும் பொருள்களை தங்கள் கவிதைக்குள் மறைத்துப் பாடியும் விளையாடுகின்றார்கள். இவர்கள் ஆண்டவன் ரூபங்களே ஆவர். ஆகவே மறைவின் தத்துவம்தான் என்ன (Philosophy of old clothes) என்று ஒரு ஆங்கில

அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன் றெந்தாய் பராபரமே.

ஆராய்ச்சியாளர் எழுதி யிருக்கின்றார். பாகவதத்தில் இதன் தத்துவம் விவரிக்கப் பட்டுள்ளது. அதுதான் என்ன?

பஞ்சேந்திரியங்கள் உலகின்மேல் சென்று ஆசைகளையும் வினைகளையும் தேடிக் கொண்டு வந்து, மனசமாதானத்தைக் கெடுத்து துன்பம் விளைவிக்கின்றன; ஆகையால், பஞ்சேந்திரியங்கள் அடங்கும் வரை உலகத்தை அவைகளி னின்றும் மறைக்க வேண்டுவது சரியான முயற்சிதான். ஆனால் ஆண்டவனை நம் பார்வையி னின்றும் மனத்தி னின்றும் மறைத்தல் ஆகாது—முடியாது. நினையாத மனத்திலும் குடிகொண் டுள்ளான். மறைந்தே உள்ளான். மனிதனுக்கு ஆண்டவன் ஒரு திரை கொடுத்திருக்கின்றான். அந்தத் திரையை மடித்து உள்ளே வைக்க முடியாது. அது பலகைபோல உள்ளது. வெளியில் தள்ளவும் முடியாது. அந்தத் திரையை உள்ளே வைத்தால், உள்ளிருக்கும் ஆண்டவனை மறைத்து விடுகின்றது. வெளியே வைத்தால் உலகத்தை மறைத்து விடுகின்றது. ஜகத்தை மறைத்து, அகத்தைப் பார்த்து அனுபவிக்கவே திரையை உபயோகியுங்கள் என்பார் ஞானிகள்.

திருமூலர் சொல்வார்—

> 'முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
> அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்'

என்பர்.

தன்னை அறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றும் உண்டோ பேசாய் பராபரமே.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்.

என்றும் உபதேசித்தார்.

ஆண்டவனை தேடிக் கண்டு கொண்டார்-எங்கே? 'தன்னுள்ளே' என்றார் அப்பர். ஆகையால் ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் இருக்கின்ற ஆண்டவனை, உலகை மறைத்து ஒவ்வொரு ஜீவனும் உள் நோக்கிக் காணவேணும். ஆண்டவனுக்குப் பயந்து ஒரு ஜீவனும் தன்னை மறைத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், மறைவு என்ற தத்துவமும் ஆண்டவனே யாகும்.

எவ்வளவு முயற்சி செய்யப் பெற்றாலும் ஜீவர்கள் ஆண்டவனுக்கயலாகி, தங்கள் குற்றங்களை மறைத்துக்கொள்ள முடியாது. இந்த தத்துவம் வேடிக்கைக் கதையாக வெளியிடப்பட்டது, பாரதத்திலும் பாகவதத்திலும். தவத்தின்செல்வி த்ரௌபதை (மனம்), ஐந்து புருஷர்களைப் பெற்றும் (ஐம் பொறிகள்), தன்னை மானபங்கம் செய்யவந்த துரியோதனர்கள் சபையில் துணையற்று நின்றாள். கண்ணனே உபகரித்தான். கண்ணன் தன் மாயையாலே அநேக துகில்களாகி, தன் கருணையெனும் மறைவால் த்ரோபதையை மறைத்துவிட்டான். தானே துகில்களாகிவிட்டான் போலும். மானம் காக்கப்பெற்றாள். திருப்புகழில் 'என் மானம் உன

தன்னை அறிந்தருளே தாரகமா நிற்பதுவே
உன்னை அறிதற் குபாயம் பராபரமே.

தென்று மோதும் ஏழைகள் வியாகுலம் இதேதெந விஞவில் உனை ஏவர் புகழ்வார் மறையும் என் சொலாதோ' என்று அருணகிரி பாடியதும் இதுவே. ஆண்டவ னிடத்திருந்து நாம் மறைத்துக் கொள்ள வும் காத்துக் கொள்ளவும் வேண்டிய விஷயங்கள் ஒன்றும் இல்லையே; எல்லாம் அவன் அறிந்தவனே யாதலால், எல்லாம் அவன் பொருளே யாதலால். இதே கண்ணன் யமுனு நதிக்கரையில் ஒரு லீலை செய் தான். புருஷபூண்டு இல்லாத இடத்தில் சிறுமிகள் ஆடைகளைக் கரையில் வைத்துவிட்டு நக்னர்களாக ஸ்நானம் செய்தார்கள். யமுனு தீர்த்தம் எல்லாம் கண்ணன் நாராயணனென்ற நினைவு அற்றவர்க ளாய், ஆடையின்றி ஜலத்தில் துளைந்து விளையாடி ஞர்கள். அப்பொழுது கண்ணன் தனிமையிலே வந்தான். எந்நேரமும் வருபவன் அல்லவா? ஆடை களை எடுத்துக்கொண்டு மரத்தினில் ஏறிக்கொண் டான். பாம்புகள் மரத்தைச் சுற்றிக் கொண்டிருக் கின்றன. கோபிகள் கரையேறிப் பார்த்தால் சேலை களைக் காணும். ஜலத்துக்குள்ளே ஆண்டவனை, என் முன்பு ஆடையிலாதிருந்த நீங்கள், ஜலத்தை விட்டு வெளிவந்தவுடன் ஏன் துகிலை நாடுகின்றீர் கள். மற்றெருவரும் இங்கு இல்லையே என்று கேட் டான். தான் நாராயணன் என்றும், ஜலம் நாரா யண ஸ்வரூபமென்றும், ஜீவர்களான கோபிகைகள் ஆண்டவனிடமிருந்து மறைப்பதற்கு சேலைகள் ஏற் பட வில்லையென்றும், அவர்கள் மானத்தை காத்து

. வான்காண வேண்டின் மலையேற லோக்கும் உன்னை
நான்காணப் பாவனைசெய் நாரட்ட பராபரமே.

ரக்ஷிக்கின்ற துகில் உருவங்கள் எல்லாம் கண்ணனே யென்றும் உபதேசித்தான். உணர்ந்த கோபிகள், கண்ணனே ஆன துகில்களைக் கண்ணனிடம் பெற்று, மானசம்ரக்ஷண மடைந்து, பக்தியில் ஈடுபட்டார்கள். இந்த அபூர்வ உபதேசத்தைத் தவருகப் பேசுவதும் கொள்வதும் நமது குணதோஷமாகும்; அறிவின்மையாகும். எவ்வளவு துணிகளால் போர்த்துக் கொண்டாலும் ஒருவன் தனது நக்னத்தை தன் மனதிலிருந்து எப்படி மறைக்க முடியாதோ, அவ்விதமே ஆகும், தன் மனதில் வசிக்கும் ஆண்டவனிடமிருந்தும். ஆகையால் உங்களிடமிருந்து ஆண்டவனை மறைத்துக் கொள்ளாதீர்கள். ஆசாபாச உலகினை மறைக்கவே துகில்களை உபயோகியுங்கள் என்ற தத்துவத்தை வெளியிட்டார்கள் மேலோர்கள்.

'தெரதீயகராதா லேரானே! திருப்பதி வேங்கடரமணு!' என்று ஸ்ரீ த்யாகய்யர் பாடியது மிகவும் போற்றத்தக்கது.

ஆண்டவனை எங்கும் பார்க்க திறம்கொண்ட ஞானிகள் திகம்பரர்களாகவே சஞ்சரிப்பார்கள். இவ்விதம் அநுஷ்டிக்கும் திகம்பரர்கள், இமயமலைச் சாரல்களில் பலர் வசிக்கின்றார்களாம்.

முருகனடியார்—7

நல்லியக் கோடர்

(ரசபதி)

எழில் வளம் பல நிறைந்தது எறுமா நாடு. பொலிவு பெற்ற அந்த நாட்டிலிருந்து, எயில் பட்டினம், ஆமூர், வேலூர்,

---

விளக்குந் தகளியையும் வேறென்ஞர் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று சொல்வார் பராபரமே.

மூதூர் எனும் நான்கு நகரங்களிலும் அரண் அமைத்து, நல்லரசு நடத்தியவர் நல்லியக்கோடர் எனும் மன்னர். அறிவு மிக்கவர்; ஆற்றல் நிறைந்தவர்; முயற்சி குன்றாதவர்; அறமெலாம் திரண்டு ஓர் உருவானவர் அவர்.

வளர்ந்த வண்மை

பொன்னாடையை மயிலுக்குப் போர்த்து புகழ் பெற்றவன் பேகன்; தடுத்த முல்லைக் கொடிக்குத் தன் தேர் தந்தவன் பாரி; பட்டக் குதிரையையும் பரந்த நாட்டையும் இரவலர்க்கு ஈந்தவன் காரி; பாம்பளித்த நீலப் பட்டாடையை, ஆலின் கீழிருந்த அமலனுக்குச் சாத்தியவன் ஆய்; மலைச்செறிவில் நின்ற கருநெல்லிக் கனியைத் தான் புசித்துநெடுநாள் வாழ நினையாது, அதனை ஒளவைக்கு அளித்தவன் குதிரைமலை அதிகன்; உயர் குதிரை யேறி உலகிற்கு விரைந்து உதவியவன் ஓரி. நல் உணவும் ஆரமும் கடகமும் புலவர்க்கு அளித்தவன் நள்ளி.

கடையெழு வள்ளல்கள் இவர்கள், ஒவ்வொரு வகையில் உயர்ந்தவர்கள். நலம் சிறந்த இந்த எழுவரினும் புனிதர் நல்லியக் கோடர். அவர் கனிவு நிறைந்த ஒரு கற்பகம். பண்பு நிறைந்த பாவலர் இதயம், அவரைப் பாடி மகிழும். நம்பனுக்குரிய நாள்கள் தோறும், நியமத்தொடு வழிபடும் அவர் உளத்தில், என்றும் முருகன் இருந்தான் அருந்தமிழ் ஆய்வு, எம்மான் குமரன் அருட் புகழ் இசை, சொல்லி முடியாத கந்தன் கருணைச் சொற் பொழிவு, வரத குகன் ஆலய வழிபாடு முதலியன, மன்னர் ஏற்பாட்டின்படி அந்நாளில் என்றும் எங்கும் இனிது நிகழ்ந்தன.

கொற்றவர் மனநிலையிற் பயின்ற குடிகள், இயற்கை வாழ்வில் இன்பங் கண்டனர். உள்ளம் தூயராய், உமையாள் குமரனை உவந்து வழிபட்டனர். எங்கும் பஜனை. முருகா முருகா முருகா எனும் அவர்களது அன்பின் விளி, விண்ணளாவி விளங்கியது.

---

* பாராதி நீயாப் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயும் சிவனுநீ யாங்காண் பராபரமே.

உள்ளம்போல் உலகம்

அரிய இம் மன நிலையை நாட்டில் வளர்த்தவர் அரசர். இதனால், அவர் நாட்டில் கள்வரும் இல்லை; பொருள் காவலரும் இல்லை எங்கும் அமைதி. எங்கும் தூய்மை. எங்கும் இன்பம். என்ன அற்புதம்! மக்களின் தூய மனநிலையும், அவர்களை அந் நெறியிற் பயிற்றிய மன்னர் அறமும், மாதம் மும்மாரி பெய்ய வைத்தது. வானோங்கிப் பயிர்கள் வளர்ந்தன. கட்டு கலம் காணும்; கதிர் உழக்கு நெல் காணும் எனும்படி வயல்கள் வளங் கொழித்தன. வண்டு பாட, மயில் ஆட, மான் கன்று துள்ள, குயில் இனிது கூவ, மது நிறைந்து மணம் கொழிக்கும் மலர்ச் சோலைகள் எங்கும் நிறைந்து இருந்தன. இறைவன் திருவருளை நம்பிய நல்லியக் கோடர் ஆண்ட பகுதி யெல்லாம் பொன்னகர மாகிப் பொலிந்தது.

அழுக்காறு

மக்களுடைய பாராட்டைப் பெற்ற மன்னரை, பாழும் ஒரு வன் பகைத்தான். திருஷ்டி பரிகாரம் போல் அத் தீயோன் மன் னர்க்கு முதல் அமைச்சனாக இருந்தான். மன்னர் தேவியின் பெயர் விமலா. அவள் பேரழகுடைய பெருமாட்டி. முகத்தில் வசீ கரம். பார்வையில் குளுமை. பொறுக்கி எடுத்து வைக்கப் பெற் றது போன்ற மூக்கு. பொலிவுறும் உதட்டில் புன்னகை முதலி யன, அவன் மனத்தை என்னென்னவோ செய்தன. அவள் ஒரு கற்புக்கனல். மன்னர் போல் முருக பக்தை. அதை அவன் அறிவான்.

காட்சிக்கு எளியர்; கடுஞ்சொல் அறியாதவர் காவலர். நெற் றியில் நீறணிந்து, விமல முருகா என்றால் போதும். அவர்கள் அரண்மனை முழுதும் உலவ உரிமை யுடையவர். அரசியும், இந் நிலையரைக் கண்டபோ தெல்லாம் நகை முகத்தொடு வரவேற் பள். அரச தம்பதிகளின் மன நிலை யறியாத அந்த மந்த மதி, இஞ்சி தின்ற குரங்காகிப் பல்லை யிளித்தான். அரசியை இடை

மாயா சகமிலையேல் மற்றெனக்கோர் பற்றுமிலை
நீயேநான் என்றுவந்து நிற்பேன் பராபரமே.

யிடை பார்க்கும் ஆசை மிகுந்து, அதிகமாக விபூதியை அணிவான். மொழி யெழுந்தோறும் முருக நாமம் அவன் வாயில் முன்னிற்கும். இவனது கபட நாடகத்தை எவரும் அறியார். காமுக பாதகன், காலம் நோக்கிக் காத்திருந்தான்.

சூழ்ச்சிப் புயல்

தமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவர். சேரர் சோழர் பாண்டியர் என்பது அவர் பெயர். நல்லியக் கோடர் அறியாத படி, ஒவ்வொருவராக, சான்றாண்மை மிக்க அவர்களை அமைச்சன் சந்தித்துச் சொன்னதாவது:—

"பொன் விளையும் பூமி எங்கள் நாடு. எனினும், பாவலர்க்கு வழங்கும் பரிசால், வறண்டு போகின்றது அந்த வளம். குடிகளின் நலத்தை உணர்வதில்லை கொற்றவன். மூவேந்தர், என் பெருமையின் முன் சாவேந்தர் என்று தம்பட்டம் அடிக்கின்றார் எங்கள் தரணிபர். முகப்பு மொழியிவை முறையல்ல என்று பலதரம் படித்தேன். மன்னரைத் திருத்த முயன்ற என் முயற்சிகள் எல்லாம், விழலுக்கு இறைத்த நீராயின. குடிகள் எல்லாம், மன்னன் கொடுங்கோல் பொறாமல், குமரன்கோயிலில் சென்று குமுறுகின்றனர். அதைக்கண்டு, பக்தி வெள்ளம் என்னுடைய நாட்டில் கரைபுரண்டு ஓடுகின்றது என்று நகைக்கின்றார் அந்த நல்லியக் கோடர்.

எறுமா நாட்டைக் கவர்ந்து, தக்க ஒருவர் பார்வையில் அந்நாட்டிற்குக் காப்பளிக்க வேண்டுகிறேன் என்று பல சொல்லி வேண்டினன்.

குறுநரியின் தந்திரம் மிக்க அம்மந்திரியின் வஞ்சமொழிகளில் நஞ்சமுள்ள தென்பதை, நரேந்திரர் மூவரும் அறிந்திலர். ஒவ்வொரு செய்தியும் உண்மை யென்றே கொண்டனர். அரச தூதர்களை யனுப்பி செய்தியை அறிய இயலாதபடி, ஆன சூழ்ச்சி யத்தனையும் செய்தான் அமைச்சன்.

---

* வரனுதி நீயெனவே வைத்தமறை என்னையும்நீ
தானாகச் சொல்லாதோ சாற்றுய் பராபரமே.

அதிக அழிவிற்கு இடம் வேண்டா. உங்கள் படைப் பெருக்கம் கண்டதும் குலைநடுங்குவன் கோமகன். இருக்கும் தற்காப்புப் படைகளுடன், அரசனைப் போர்க்களத்திற்கு அழைத்து வருகிறேன். சுலபமாக மன்னனைச் சிறைப்படுத்தி விடலாம் என்ற அவன் மொழிகளை மூவரும் நம்பினர். போர்க்குரிய நாளையும் வகுத்தனர்.

நல்லியக் கோடர் சிறை புக்கபின், அந்நாட்டை நீரே ஆள் வீராக! அரச தருமம் ஆட்சியில் அமைய வேண்டும்; குடிகள் குதூகலமாக இருக்க வேண்டும்; இதுவே எங்கள் குறிக்கோள் என்று மூவரும் கூறினர்.

அது தானே என் நோக்கமும் என்று தன் நய வஞ்சக நாடகத்தை நடத்திய அமைச்சன், அரசனைச் சிறை செய்தபின் அரசி எனக்கே உரியவள் என்று மனக்கோட்டை கட்டினன்; அதன் பின் அந்த மாபாவி, ஏறுமா நாட்டை எய்தினன்.

போரின் போக்கு

அழுக்காறு எழுந்தது; அவா வளர்ந்தது; வெகுளி விளைந்தது; மட்டந் தட்ட வேண்டும் மன்னனை என்னும் இன்னாச் சொல்லும் பிறந்தது; சில நாள் இடையில் சென்றன.

ஓடி வந்தான் ஒரு ஒற்றன். அரசனும் அரசியும் முருக பஜனை செய்து கொண்டிருக்கின்றனர். வேர்த்து விறு விறுத்து வந்த அவன், செய்தியை பஜனையிடையில் எப்படிச் சொல்வது என்று குழம்பினன்.

திடீரென்று, வேலாயுதப் பெருமான் வெல்க! மயிலேறும் பெருமான் வெல்க! சேவலங் கொடியோன் வெல்க என வீறிட்டுக் கூவினன். நரேந்திரர் நல்லியக் கோடரும் அரசியும் திடுக்குற்று நோக்கினர்.

பிரபோ! மன்னிக்க வேணும். படைவீரர் முதல் குடிகள் அனைவரும் பஜனையிலேயே யிருக்கின்றனர். படை பலம் இல்லையென்பதை யறிந்த எதிரிகளின் கடல்போல் பெருகிய சேனைகள்,

---

மாயைமுத லம்வினைநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந்
தாயும்அறி வானதுநீ அன்றோ பராபரமே.

எதிர்க்க வருகின்றன என்பதை யறிந்தேன். தீவிர முற்றுகை நடத்துவது அவர்கள் திட்டம் என்று நாக்குழறக் கூறினன் வந்த ஒற்றன்.

முதலமைச்சனும் அதே சமயம் வந்தான். வந்தவன்,

அரசே! செய்தி செவிக்கு எட்டி யிருக்குமென்று நம்பு கிறேன் என்றான்.

வேல்! வேல்! வேல் என்றது மன்னர் திருவாய்.

தற்காப்புப் படைகளொடு நீர் முதலில் சென்று எதிரிகளை எதிர்த்துக் கொண்டிரும்! அரசரும் யானும் விரைந்து போர்க் களத்திற்கு வருகிறோம் என்றான் அரசி.

நீங்கள் கூடவா வருகிறீர்கள்?

ஏன்? யான் பெண்பால் என்று அஞ்சுகிறீரா! முருக பஜனை யில் தாளம் தட்டுவோம்; போர்க்களத்தில் முரசு கொட்டு வோம்; வீர விலாச விஜய லட்சுமியின் கருவி லிருந்து வந்த காவலர் பரம்பரை நாங்கள்! நினைவிருக்கட்டும்! வீரர்கள் வாள் வீச்சில் வீழ்பவர் ஐவரெனில், விமலாவின் வீச்சில் வீழ்பவர் எழுவர் என்பதை விரைவில் அறிவீர்! ஏன் நிற்கிறீர்? உம்! புறப்படும்!

தயங்கித் தயங்கி முன்னொரு காலும் பின்னொரு காலும் வைத்துத் தவிக்கின்றான் தலையமைச்சன்.

அரசே! எழுந்திரும் என்ற அரசி குரலில், பெண் சிங்க கர்ஜனை யிருந்தது.

விமலா! நீ வீராங்கனை. போர்க்களத்திற்கு யான் போ கிறேன். நீ இங்கேயே இரு! அது தான் மதியுடைய தருமம் என்றார் மன்னர்.

அரசே அடுப்பூதும் காலம் ஒரு காலம். நாட்டிற்கு அபாயம் வந்துள தென்பதை யறிந்த பின், அப்பளம் பொரித்துக் கொண் டிருப்பது அணங்குகளின் அறமன்று என்றனள் அரசி.

· என்னறிவும் யானும்என தென்பதுவு மாம்இவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே.

சரி, அப்படியே செய்வோம் என்ற அரசர், தயங்கி நிற்கும் தலையமைச்சனை நோக்கி, இருக்கும் படைகளுடன் நீர் முன் செல்லும்! மற்றவரைத் திரட்டிக் கொண்டு நாங்களும் வருகிறோம் என்றார்.

ஒன்றும் தோன்றாத அமைச்சன், சுவல்ப படைகளுடன் சென்றான். இடைவழியில் படைகளை நிறுத்தி, மூவேந்தர் படையுள் நுழைந்தான். சேனை யதிபர்களை அந்தரங்கத்தில் சந்தித்தான்.

அரசியும் மன்னனொடு சேர்ந்து அமர் செய்ய வரப்போகிறாள்; என் செய்யலாம் ' என்றான்.

என்ன செய்ய வேண்டும் நாங்கள் என்றான் தலைமைச் சேனை யதிபன்.

வேந்தனைச் சிறைப் பிடிக்க இயலாதேல், நிலத்தின் அவன் தலையை உருளவிடலாம். அரசிக்கு மட்டும் சிறிது இடையூறும் நேராதபடி, அவளைப் பிடித்து விலங்கிட்டு என்பால் ஒப்படைக்க வேண்டும். சிறிது இடையூறு நேருமெனினும், ஸ்திரீ ஹத்தி நேர்ந்தது என்று, மூவேந்தரும் நம்பால் சினம் கொள்வர் என்று கூறினன் கொடிய அமைச்சன்.

பாவியின் மொழிகளை மெய்யென நம்பிய சேனாதிபதி, உங்கள் கட்டளைப்படி நடக்க எங்கட்கு உத்தரவு; அப்படியே செய்கிறேன் என்றான்.

அதன்பின், மூவேந்தர் படைகளோடு முன் வந்த தீயோன், தான் இடையில் நிறுத்தி வந்த தன் படைகளை அணுகினன். போர் செய்ய வேண்டாம்! சரணடையுங்கள்! இவர்கள், அரசனைச் சிறைப் பிடித்துச் செல்லட்டும். இனிமேல் யானே உங்கள் மன்னன்; ஒரு குறையும் நேராதபடி உங்களைப் பரிபாலிப்பேன் என்ற மந்திரியின் மொழிகள், இராஜ விஸ்வாசிகட்கு நாராசமாக இருந்தது.

பாரறியா தண்டப் பரப்பறியா துன்பெருமை
யாரறிவார் நானே அறிவேன் பராபரமே.

துரோகி! என்ற குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன. முதலில் உன்னை ஒழித்துக் கட்டுகிறோம் என்று ஓடி வந்தனர் சிலர். பகைவீரர் குறுக்கிட்டமையின், தப்பியது மந்திரியின் தலை.

கடும் போர் ஆரம்பமாயது. தலைகள் உருண்டன. உறுப்புக்கள் சிதறின. உதிர வெள்ளம் பெருகியது. எதிரிகட்கு ஏரானமான சேதம். மூவேந்தர் படைகள் மேன்மேல் வந்து குவிகிறது. நல்லியக் கோடர் படைகள் வீராவேசத்தோடு போரிடுகின்றன. ஒரு வீரன் உயிர் உள்ளவரை, அரசரைச் சிறைப் பிடிக்க விடுவதில்லை என்பது அவர்கள் முடிவு.

காப்பு முயற்சி

வீரன் ஒருவன் குதிரை மேல் விரைந்தான். குறித்த இடம் வந்தான். குதிரையி னின்றும் குதித்தான். பார்த்திபர் நல்லியக் கோடரை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்றான். காப்பாளர் அவனை அரசன் முன் கொண்டு சென்றனர். படைதிரட்ட பல இடங்கட்கும் ஆள்களை யனுப்பி, அரசர் அரசியோடு போர்க்கு முயன்று கொண்டிருப்பதைக் கண்டு, வந்த வீரன் வணங்கினான். அமைச்சன் சூழ்ச்சி, பகைவர் படைப் பெருக்கம், சிறைப் பிடிக்கச் செய்திருக்கும் சதித் திட்டம் அனைத்தையும் விவரமாக அறிவித்தான். தம் காப்புப் படைகள், பகைவர் மேலேறி வராதபடி தடை செய்து கொண்டிருப்பதையும் விண்ணப்பித்தான்.

கேட்டதும் கொதித்தெழுந்த கொற்றவனை, பிரபோ! காலம் பார்த்து எதிர்ப்பது கடன். இச்சமயம் மட்டும் அரசியாருடன் தாங்கள் வேறு இடம் சென்றிருப்பது நலம். செய்யும் முயற்சியை அங்கிருந்து செய்யுங்கள். காலம் கைகூடும்வரை, தாங்கள் இருக்குமிடம் எதிரிகட்குத் தெரியாதிருப்பது முக்கியம் என்றனன் வீரன்.

அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக் கப்பாலுங்
கொண்ட நின்னை யாரறிந்து கொள்வார் பராபரமே.

அதனை மெய்க்காப்பாளரும் ஆமோதித்தனர். வெற்றி முக்கியம்; எதிர்த்து வீழ்வது மரபாகாது என்று அரசியும் எண்ணுகிறார். வேறு விதியின்றி உடன்பட்டார் மன்னர்.

இரவு மணி ஏழு. தங்கள் உடையை இங்கிருக்கும் ஒருவர் தரிக்கட்டும். அரச குதிரையும் தனது தானத்திலேயே இருக்கட்டும். என் குதிரைமேல் அரசியாருடன் ஏறிக் கொள்ளுங்கள். மெய்க் காப்பாளருடன் மாறு வேடம் பூண்டு, விரும்பும் இடத்திற்கு விரைந்து செல்லல் நலம் இதனால் எவர்க்கும் ஐயம் பிறவாது. ஆண்டவன் மேல் ஆணை. இது, தற்காப்புப் படையின் தற்காலிகத் தலைவனான எளியேனது வேண்டுகை என்று நாக் குழறக் கூறியபடி, போரில் தாக்குண்டு திரும்பிய அவ்வீரன், முருகா! எங்கள் மன்னர் இறுதியில் வெல்ல அருள் என்று, எஞ்சிய மூச்சுடன் வீறிட்டுக் கூவி, நிலத்தின் மேல் வீழ்ந்தான்.

மன்னர் இச்சம்பவங் கண்டு சிறிது மனம் கலங்கினார். வேறு வீதியில்லை. யோசிக்கவும் நேரமில்லை. மற்றவர் துரிதப் படுத்துகின்றனர். ஆன்மார்த்த முருகனிருந்த பூஜைப் பெட்டகத்தை எடுத்துக் கொண்டார். அரசியுடன் குதிரையிலேறினார். காப்பாளர் தொடர்ந்தனர். இரவெல்லாம் பிரயாணம்.

விடியற் காலம் மணி நான்கு. கருங்கல் கோட்டை ஒன்று அங்கு விண்ணளாவி விளங்குகிறது. தம்முடையதான அக்கோட்டையுள், அரசர் நுழைந்தார். காப்பாளர், பிரம்மாண்டமான கோட்டைக் கதவைச் சாத்தித் தாழிட்டனர்.'

தம்பதிகள் சம்பாஷணை

அமைச்சன் செய்த சதி, முள்போல் தைத்து அரசர் உள்ளத்தை முறித்துவிட்டது பகலெல்லாம் இதே சிந்தனை.

அரசியின் கண்கள், முத்து முத்தாய் நீர்த்துளிகளைச் சிந்துகின்றன; காண்கிறார் காவலர்.

ஏன் விமலா! கோட்டையின் சூழ்நிலை, சிறைவாசம் போல் தோன்றுகிறதா?

என்போல் எளியவரும் எங்கெங்கு பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே.

நாதா! இது நமது கோட்டை. பக்த மணியான தங்கள் பக்கத்தி லிருக்கும் எனக்கு, இது சிறை வாசமாக எப்படித் தோன்றும்? நேற்று பகல் தொடங்கி, முருக பஜனை தடைப்பட்டதே என்று தான் வருந்துகிறது மனம். அதனுடன், தற்காப்புப் படை வீரர்கள், நம்மைக் காக்கத் தம் உயிர்களைத் தியாகம் செய்ததையும் நினைக்கிறேன். போர்க்களம் சென்று வீரசுவர்க்கம் பெற்றிருந்தாலும் நலமாயிருக்கும். என்னைவிட்டு தங்களைச் சிறைப் பிடிக்கும் திட்டம் எதிரிகளிடம் இருப்பதை அந்த வீரன் தெரிவித்த பின், போர்க்களம் செல்லும் என் மனோ வேகம் அடங்கியது. என் உயிர் உள்ளவரை, நிழலெனத் தங்களைத் தொடர்ந்து வருவது என் திட்டம்.

விமலா! சதித் திட்டம் இருக்கலாம். உயிர் உள்ளவரை என் உடலை ஒருவன் தொட முடியும் என்று கனவிலும் கருத வேண்டாம் நீ. எனக்குப் பின் உன் கதி என்ன என்று எண்ணி, சிறிது என் மனம் சிதைந்தது. அது கருதியே இரவோடிரவாய் இங்கு வர உடன் பட்டேன்.

நாதா! அமைதி வாழ்க்கையைத் திருவருள் உதவியது; அதைக் குலைக்கப் பிறர் முயல்வரேல், அதனி லிருந்து தப்ப திருவருளே வழி காட்டும்.

தேவி! உண்மைதான். யாது விளையினும் விளைக. படை திரட்டி, அவர்கட்குப் பயிற்சி யளிக்க சில நாட்களேனும் செல்லும். இடைக் காலத்தை வீணாக்காமல், நம் உயிர்த் துணைவன் உமையாள் குமரனை வழிபடுவம் வா என்றார் மன்னர்.

தெய்வ வழிபாடு

குகா! சரவணபவா! குமரா! வல்லீபதே! தேவயானை மணாளா! தேவர்க்கு விண்ணுலகளித்த தேவ தேவா! பக்தவத்சலா என்று பாடியபடி, கோட்டைக்குள் இருந்த கேணியுள் இருவரும் நீராடினர். ஈர உடையுடன் இருந்து, ஆன்மார்த்த

பார்க்கின் அண்ட பிண்டப் பரப்பனைத்தும் நின்செயலே
யார்க்குஞ் செயலிலையே ஐயா பராபரமே.

மூர்த்திக்கு அபிஷேக அலங்காரம் முதலியன விதிப்படி செய்தனர். பல நேரம் பரம குமரன் புகழைப் பாடினர். அன்பொடு ஆறெழுத்தை உச்சரித்தனர். தம் வசம் கெட்டு பரவசப்பட்டனர்.

அலங்கோலத்திலும் அமைதி

முதல் ஜாமம் முடிந்தது. ஓடி வந்தான் கோட்டைக் காவலன்.

இந்த இடத்தில் அரசர் இருப்பது எதிரிகட்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. விடிதற்குள் வந்து வேந்தரைப் பற்றுவராம்; இது அவர்கள் திட்டம்; இவை ஒற்றர் உரைத்த செய்தி என்று வினயமொடு கூறினன்.

எல்லாம் அமைச்சன் ஏற்பாடுதான் என்று அறிந்த அரசி, பெண் புலிபோல உறுமினள்.

வருவது வருக; இடையில் முருகன் வழிபாடு தடைப்பட வேண்டா என்றார் வேந்தர். அரசி அமைதி யடைந்தாள். வந்த காவலன் தலை குனிந்து திரும்பினன்.

இரண்டாம் யாமத்தில் மீட்டும் அக் காவலனே வந்தான்; படபடக்கிறது அவன் உடல். விரோதிகள் நம் கோட்டையை நோக்கி விரைந்து வருகிறார்களாம் என்றான்.

வேலுண்டு வினையில்லை என்றார் வேந்தர்.

மயிலுண்டு பயமில்லை என்றாள் தேவி.

வருந்தித் திரும்பினான் வந்தவன். புயலுக்கு நாணல் அஞ்சுவதில்லை; நாணலைவிட வலிது மனோ உறுதி யல்லவா!

மூன்றாம் ஜாமத்தில் உடல் துடிக்க மனம் பதைக்க ஓடி வந்த ஒரு ஒற்றன், பகைவர்கள் காத தூரத்தில் விரைந்து வந்து விட்டார்கள். அரசரும் அரசியாரும், வேறு எங்கேனும் செல்லற்குச் சித்தமா யிருப்பது நலம் என்று தொழுது கூறினான்.

ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்பதுன்னை என்றோ பராபரமே.

வந்த வினையும் மாயும்; வருகின்ற வல்வினையும் ஓயும் என்றார் மன்னர். கந்தன் கருணை யாவரையும் காக்கும் என்று மனம் களித்து கூறினள் அரசி,

நான்காம் ஜாமம் கண்ணியது. அரசி தியானத்தில் அழுந்தினள். அரசர்க்குச் சிறிது அயர்வு. அப்படியே சிறிது கண்ணுறங்கினார் எதிரி லிருந்த ஆண்மார்த்த முருகன் திருவுருவத்திலிருந்து, ஒரு தெய்வ ஒளி எழுந்தது; அரசர் மேல் படர்ந்தது.

ஆ! என்ன அற்புதமான கனவு!

அருளொழுகும் கண்ணுளன் முருகன், தனது மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டுகிறான். ஒரு கரத்தில் ஒளிவிடுகிறது வேல். மயிலும் சேவலும் பிந்தி வர, முந்தி வருகிறான் அந்த முதல்வன்.

அன்பனே! அஞ்சாதே! உனது தேவியும் நீயும் எனது செல்வக் குழந்தைகள். எமக்கு அபராதம் புரியின் பொறுப்பம்; எமது அடியார்க்கு அபராதம் செய்வாரை ஒருநாளும் சகியோம்; நீ நீராடிய கேணியில், மாசற்ற பல மலர்கள் இருக்கின்றன. ஒன்றைப் பறித்துப் பிய்த்துப் பகைவரை நோக்கி எறி; அது வரை உன் செயல்; மற்றவை நம் செயல் என்றபடி, விமலன் உருவம் விண்ணில் எழுந்து மறைந்தது.

கண்துயி லகன்று காவலர் எழுந்தார். குளு குளு என்று உள்ளம் குதூகலிக்கிறது; கந்தப் பரமன் கருணையை எண்ணும் போதே கண்ணீர் பெருகுகிறது.

அத்தா! இந்த ஏழைக்கு விரைந்து அருள் பாலிக்க, மயிலிலும் ஏறுமல், தெய்வமறை காணுத் திருவடிகள் சேப்ப நடந்து வந்தனையோ நம்பா! உனது அருள் நீடூழி வாழி என்று, சண்முகன் தரிசனமான திசை நோக்கித் தொழுதார்.

அட்டூழியம் அளவு கடந்துவிட்டது; விரைந்து செயல்செய் என்று, பிறங்கும் ஆகாயத்திலிருந்து அசரீரி பிறந்தது.

செப்புவதெல் லாஞ்செபம்நான் சிந்திப்ப தெல்லாம்நின்
ஒப்பில் தியானமென ஓர்ந்தேன் பராபரமே.

தியானம் நீங்கிக் கணவரை வணங்கினள் தேவி. தங்கட்குக் கனவில் அருளிய கந்தப் பெருமான், அசரீரி மூலமாக உய்திக்குரிய செய்தியை, எளிய யாரும் உணர அருளினன். அப்பரமன் அருளிருந்தவாறு என்னே என்று, முருக பஜனை தொடங்கினள் அரசி.

டணர்—டணர்—டணர்—என்ன இது? ஓஹோ!

எழுச்சி மிக்க கோட்டைக் கதவைப்பகைவர் இடிக்கின்றனர். இச்செய்தியை ஓடி வந்து கதறிக் குமுறிக்கூறினன் காப்பாளன்.

உடனே மன்னர் கேணியில் இறங்கினர். திருமால் மருகனைத் தியானித்தார். குக காயத்ரியை அரசி கூறியபடியேயிருந்தனள். மலரைக் கொய்தார் மன்னர். கரையில் ஏறினார். இதழ்களைப் பிய்த்தார். அவைகளை, அரசரும் அரசியும் பரமன் வேல்களாகப் பாவித்தனர். ஆறெழுத்தைக் கூறி, தம் எதிர் முகமாக எறிந்தனர்.

என்ன வியப்பு! வித்தக இதழ்கள் ஒவ்வொன்றும் வேல் உருவம் கொண்டன. விண்ணெலாம் நடுங்க விரைந்தன. கதவை பிடிப்பவர் ஆயுளை முடித்தன. தந்திர மந்திரியின் தலையைத் தடிந்தது ஒரு வேல்.

எயில் பட்டினம், ஆமூர், மூதூர் முதலிய பதிகளை நோக்கி, ஹூம் ஹூம் என்று விண் வழி விரைந்தன. சிறந்த அந்த இடங்களை முற்றுகை யிட்ட சேனை வெள்ளங்களைச்சிதைத்தன.

அதன் பின் அந்த ஊங்கார வேல்கள், ஒருங்கு திரண்டன. ஒளிமயமான ஓரே வேலாயின. கோட்டையுள், மன்னர் வழிபட்ட ஆன்மார்த்த மூர்த்தியின் அண்மையில் வந்து அமர்ந்தது அந்த வேல். இச்சம்பவம்,

விரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

என்ற பாடலை நம் நினைவில் வருவிக்கிறதல்லவா!

ஆரிருந்தென் ஆர்போய்என் ஆரமுதாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.

வேல்கள் படைகளை வீழ்த்திய வரலாற்றை, முடியுடை வேந்தர் மூவரும் அறிந்தனர். அதிகம் அஞ்சினர். முருகனடியார் நல்வியக் கோடர்; அவர் அன்பின் பெருமையை அறியாது, மந்திரியின் வஞ்சக மொழிகளால், மயங்கிய தங்கள் நல்லறிவில்லாமையை நினைத்து நாணினர்.

மன்னிக்க வேண்டும்; அடியேங்கட்குத் தரிசனம் அளிக்க வேண்டும் என்று தங்கள் அகத்தூய்மையை நினைவுறுத்தும் விண்ணப்பங்களை அனுப்பினர். முடியுடை மன்னர்களை அஞ்ச வைத்தது வேல் நாதன் திருவருள் என்று அறிந்துள அரசர் நல்வியக் கோடர், காணிக்கையொடு வந்து வணங்கிய மூவேந்தர்களையும், ஆகமுறத் தழுவி அளவளாவினார்.

மூன்று வேந்தர்களையும் மூன்று மாதம் வரை தனது கோட்டையில் வைத்து உபசரித்தார். இதழ்கள் வேல்களாகிப் பகைவரைப் பொன்ற வைத்த பொற்பு நோக்கி, அவ்வூர்க்கு வேலூர் என்று பெயரிட்டார் அறுமுக பக்தரான அரசர்.

கோட்டைக்குள் குமரனுக்கு ஒரு கோயில் கட்டினார். மனைவியுடன் வழிபட்டார். வேலூரையே இராஜதானியாக்கி, அங்கிருந்து நாட்டு நிர்வாகத்தை நடத்தினார்.

பஜனை, முருகப் பிரபாவ சொற்பொழிவுகள், நாட்டில் பழையபடி நடந்தன. எங்கும் அன்பு வெள்ளம் குடிகளிடம் கரைபுரண்டு பெருகியது.

பரமன் பக்திப் பெருங்காதல் எங்கும் பரவ, இனிது பல காலம் அரசாண்ட நல்வியக் கோடர் ஆன்மா, இறைவன் திருவுளப்படி, ஒரு நாள், தேவியுடன் கந்தன் திருவருள் நிழலில் கலந்தது.

புட்பத்தை வேலாக்கி அன்பர்க்கு உதவிய காரணத்தால், முருகன் புட்ப சத்திர மூர்த்தி யென்ற புதுப்பெயரும் பெற்றான்.

வஞ்ச நமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனையடைந்தேன் ஐயா பராபரமே.

கடைச் சங்கப் புலவருள் ஒருவரான இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், நல்லியக் கோடரின் பரிசில் விரும்பிப் பாடிய சிறுபாணாற்றுப் படையிலும் இவ்வரலாறுளது.

வெறிவண்டிசை பாடும்பொழில் வேலூரினை யாளும்
பொறிதங்கிய புகழான்நலி யக்கோடன் உறங்கும்
நெறிவந்து அலர் வேல் ஏவுதி! நெறியும் பகை யென்ற
மறியின்சுதை தலைவரனை மறவேலனை மறவேல்.

என்று இவ்வரலாற்றை இன்றும் பாடி மகிழ்கிறது தமிழகம்.

பாடும் பணி

(சித்தாந்தச் செல்வமணி சி. பிருந்தாதேவி, திருக்கோகர்ணம்)

தான் அறிந்ததை உணர்ந்து எழுதுவதும், பெரியார்கள், மெய்யடியார்கள், அவனையே நினைப்பவர்கள், தாம் உணர்ந்து உணர்ந்து உளநெக்கு நின்றுருகிக் கனிந்து கழறும் உண்மை மொழிகளை ஓதி ஓதி, உளளுணர்வில் எழுதுவதும் ஒன்றெனத் தோன்றவே, அருளுடைப் பூமான் அருணகிரியான் செப்பிய சீரிய கருத்துக்கள் என் சிந்தையில நின்று, கட்டுரை கட்ட விட்டகலா ஆர்வம் தொட்டது! அதன் விளைவே இவ்வாக்க வேலை.

உள்ளம் பண்பட்டால உணர்வு ஒன்றும். அவனை நினைந்துருகும் நெஞ்சமே பண்பாடென்னும் பாட்டைக்குக் கைகாட்டி.

தன்னை அடைகின்ற அன்பருக்கு அருளை நலகுகின்ற முருகனை நினையப்பா! எப்படி? எளிதாகவா? அன்றன்று. நெஞ்சமாகிய கனமுள்ள கலலானது நீராகக் கரைந்துருக நினை!

'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள் சண்முகனுக்கு'

ஆகா! நாம் ஆண்டவனிடம் வேண்டுவதும் அவன் அருளுவதும் எத்துணை இன்பம்?

எந்தெந்த நாளும் எனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே.

வல்லான் வகுத்தது எனக்கருள். வானமாய் நின்றின்ப மழையாய் எனை வாழ்விப்பது அவன் கருணை. கல்லேனுமையை ஒரு காலத்தில் உருகும் பொழுது என் கன்னெஞ்ச மட்டும் உருகாம லிருக்குமா? இருப்பினும் என் உறுதிகொண்ட— அவனையே நாடும் உணர்வு சும்மா இருக்குமா? அன்றி அவனருட் கருணைதான் என்னைக் கடையனுக்குமா? அல்லவே! ஆனலோ—

'கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருக விலையே'

ஆம்! வேண்டுகோள் பலமானது—உறுதியானது. எல்லாத் தின் பண்டங்களும் தருகிற தாயிடம் சேய் லட்டு வேண்டுமெனக் கேட்பது போல!

எல்லாமறிந்த அறிஞன், 'நான் அறிந்தது எந்த அளவு?' என்றெண்ணுவது, மேலும் அவன் மேதையை எடுத்துக்காட்டுவது போல; அவனையே நினைந்துருகிப் பாடும் பணியைப் பணியாகக் கொண்ட பெருமான்கள், என் 'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந் துருக' என்றும், 'கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென் கன்னெஞ்ச முருக விலையே' என்றும் கேட்பது, அவர்கள் தந் தமது அருளைப் பெருக்கிக் கொள்ளுவதுடன், உறுதிப்பாடும் உணரப் படுகிறது.

'நீ எப்பொழுது இறையருள பெற்ருய்? அஃது எவ்விடம்?' எனப் பலர் கேட்கின்றனர்.

'ஆகாய விமானத்தில் பறந்தா? ஓடும் ரயில் வண்டியா? அல்லது மணிக்கு மைல் நடக்கும் கட்டை வண்டியிலா?' என்ற வினவிற்கு,

---

அஞ்சல் அஞ்சல் என்றடிமைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சில் உணர்த்தும் நிறைவே பராபரமே.

'வாஜே புனல்பார் கனன்மர் குதமோ
ஞாஜே தயமோ நவினுன் மறையோ
யாஜே மனமோ எனையாண் டவிடந்
தாஜே பொருளா வதுசண் முகனே'

எவ்விடத்தைக் கூறுவேன்? மண்ணிலும் விண்ணிலும், நான்கு திசைகளிலும் சண்முகமாக நீ யிருக்க எங்கென்றுரைப்பேன்?

என் ஆணவ அழுக்கை அகற்ற, இருட்டறை மூலையில் உறங்கிக் கிடந்த என்னை, உன் தன்மயக் கருணையால் விழிப் படையச் செய்து ஒளிக்குக் கொண்டு வந்து விட்டாய். என் நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருகச் செய்த உனக்கு நான் என்றுமே தஞ்சம். இன்னும் தெளிவாகச் சொல்லவா? உன் அடைக்கலமய்யா! 'உன் கையில் பிள்ளை உனக்கே அடைக் கல'மல்லவா?

என் சிந்தையை அடக்கியே உன்னிடம் ஒன்றை மட்டும் வேண்டுகிறேன். நோக்குவார் தன் கருத்தை நுண்ணுணர்வால் உணர்பவன் நீயல்லவா? எனது வேண்டுகோள் சுற்றி வளைத்து எழுதப்பட்டதல்ல; ஏன்? உன் கருணை எனக்குண்டு; நான் கேட்பதை நீ நிச்சயம் தருவாய்! அந்த நம்பிக்கையிலே என் மனு ஒரு வரியிலே முடிகிறது.

'பாடும் பணியே பணியா அருள்வாய்'

எம்பெருமானே! நான் மட்டும் இதைப் புதிதாகக் கேட்டுவிட வில்லை. என் முன்னோர் அப்பரும், சுந்தரரும், ஆளுடைப் பிள்ளை யும், அருண்மொழி வாசகரும், என்னம்மை புனிதவதியும் உன் னிடம் மனுப் போட்டு வேண்டியதைப் பெற்றுப் பாடினார்களே, அதைத்தான் நானும் கேட்கிறேன். பற்றெல்லா வற்றையும் துறந்த காரைக்காலம்மையே, இறவாத இன்ப அன்பு பல வேண்டி, நீ ஆட, அவள் பாடவேண்டிய பொழுது எனக்கு மட்டும் வேண்டாவோ?

தன்னைத் தந்தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக் கொண் டென்னபலன் எந்தாய் பராபரமே.

'ஆசை யென்னும் சேற்றில்
ஆழப் புதைந்து விட்டேன்' எப்போ?

உனைக் காணுதப்போ! இப்பவோ ஈவேருசை; பாடும் ஆசை. கொடுக்கிலாதானைப் பாரியே என்ருலும் இப்பூவுலகில் மானிடர் யாரும் கொடுப்பாரில்லை. ஆனுல், 'ஏசினும் ஏத்தினும் என் பிழைக்கே குழைபவன்' நீயல்லவா?

நான் உனை எந்தளவு அறிந்துளேன்—நான் மட்டும் என்ன ஞானியா? அவனுக்குக் கூட உன் முழு வண்ணமும் தெரியாதே! 'யாருக்குத்தான் தெரியும் உன் மகிமை?" ஒருவேளை, பாடும் பணியை எனக்கு நீ நல்கிடில் அறிவேன்! உன் பெருமை பாடு வேன்; உன் புகழ் பேசுவேன்! பாடி, ஆடி, ஓடி, அடங்கி ஒடுங்கி, உணர்ந்து உணர்ந்து, நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி உன்னடி அடைவேன்!

'உனக்கு விருப்பமிருப்பின் பாடேன்' என உலகோர் கூறுகின்றனர். என்னை ஆக்கியவன் என்னைப் பாடப் பணித் தால்தானே நானும் அப்பரைப்போல், சுந்தரரைப்போல், இன் னும் அதனிலும் மேலாகக் கூடப் பாடலாம்?

மணிவாசகர் அவனை வாழ்த்தினர். அவனை வாழ்த்தினுல் நமக்கும் வாழ்வுண்டு என்ற எண்ணத்திலே நானும் அம்மொழி யாலே வாழத் துகிறேன்.

'நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க
இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க'

நீ என் நெஞ்சிலே நீங்காதுறையின் என் நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருகித்தானே இருக்க வேண்டும்? இதைச் செய்தவனும் நீ தானே?

புல்லாகத் தோன்றிய என் பிறவியைப் பற்பல மாறுபாடு களுக்குப் பின்னர் மனிதனுக ஆக்குவித்தாய்; தேவனுக ஆக்கு விப்பதும் உன் கடனன்ருே? அதற்கோர் ஏணி வேண்டும்; அது தான் பாடும் பணி!

மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டை உன்னிப்
பார்க்கின் அன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே.

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் ; மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன். வீடு பேரின்பம் கண்ட இன்றே உன்னை வேண்டுகிறேன். நீராயுருக்கி என்னுயிராய் நின்றும், நெஞ்சக் கனகல்லை நெகிழ்வித்தும், நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயவுடையவனுமான நீயே என் வேண்டுதலை அறிபவனன்றோ?

'வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவுமுன்றன் விருப்பன்றே!'

நீ என்னைப் பணி கொண்டாய்; பாடும்பணி கொண்டாய். என் வேண்டுதலை அறிபவன் நீ! தருபவன்நீ யிருக்க உன்னை, 'ஆயக்கடவேன் நானோதா னென்னதோ இங்கதிகாரம்?' எனக்கெனச் செயலொன்றில்லை!

நமச்சிவாயத்தை நான் மறவாமல் பாடும்பணி—தமும்பேறிய நாச்சொல்லும் நமச்சிவாயத்தை — கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சிய பொழுதும் நற்றுணையாக நின்ற நமசிவாயத்தை—காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றோதிய நமசிவாயத்தை நான் மறவாமல் பாடும்பணி.

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே! என்னைப் படைத்த உன்னையன்றி வேறு யாரிடம் நோவேன்? என் குறையை உன்னைத் தவிர வேறு யாரும் நீக்க முடியுமா என்ன? 'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின், என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட்கொண்டருளி, வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணை'க்கே ஏங்குகின்றேன்!

என்னை நானறிவேன்! நீதரும் அருளுக்கு நான் உகந்தவனா?
யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்

ஆயினும் இவ்வினையே னழுதாலுன்னைப் பெறலாமே! 'பெறலாமே' என்ற எதிர்காலச் சந்தேகக் குறி என்ன? 'என்றுநீ

தூதொன்று மின்றி யென்னைச் சும்மா இருக்கவைத்தால்
ஈதொன்றும் போததோ இன்பம் பராபரமே.

அன்று நான்; இவ்வுறுதி கொண்ட 'நானோர் பரதேசி; ஈசன் ஆணையால் எடுப்பேன் பிச்சை'; எந்தப் 'பிச்சை? துச்சமாம் இச்சையல்ல; உன்னருள் பிச்சை; அதுவன்றி எனக்கு எதிலு மில்லை இச்சை!

'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே உனைச்
சிக்கெனப் பிடித்தேன்'—இனி விடேன்!

ஏனெனில்,

'எந்தாயும் எனக்கருள் தந்தையும்'
நீ யல்லவா?

தாயினும் சாலப் பரிவுடையநீ—என் ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கிய நீ—நெஞ்சக் கனகல்லை நெகிழ்வித்தநீ—பாடும்பணியை எனக்கருளிய நீ ஒருவன் இருக்கும் பொழுது, எனக்கேன் கவலை?

'உனக் கொரு கோடி நமஸ்காரம்
எனைஇனிப் பிறவாவரம் அருளப்பா'

மண்ணில் பிறப்பின் மாயை என்னும் இரவு என்னை வதைக்குமே!

பாடும் பணியை எனக்கருளி, இறுதியில் யானாகிய என்னை விழுங்கி, வெறும் தானாய் நிலை நிற்பதையே உன்னிடம் வேண்டிப் பணிகின்றேன்!

சேக்கிழார் செய்தது

(இளவழகனார்)

(228-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பியாரூரர், திருவெண்ணெய் நல்லூரிலுள்ள 'திருவருள் துறை' என்னும் திருக்கோயிலினுள்ளே புகுந்தபின், முன்னே சென்ற வேதியரைக் கண்டிலர். உடனே,

---

பித்தனை ஏதுமறியாப் பேதையனை ஆண்டவுனக்
கெத்தனைதான் தெண்ட னிடுவேன் பராபரமே.

வான் வெளியில் விடையின்மேல் இறைவன் காட்சியளித்தார். அளித்து,

'முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவலாலே பிறந்தனை
மண்ணின் மீது ;
துன்புறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடாந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாம்தடுத் தாண்டோம்'

என்றார். ஈன்ற ஆனின் கனைப்பொலி கேட்ட இளங்கன்று போல, அது கேட்டு, நாவலர்கோன் உள்ளம் நீராய் உருகி, 'இறைவன் செயலோ இங்ஙனம் வலிய வந்து ஆட்கொண்டது' என்று வியந்து விம்மிதமுற்றார்.

இறைவன், என்னிடம் நீ வன்மை பேசியதனால் 'வன்றொண்டன்' என்னும் பெயர் இதுமுதல் உனக்கு விளங்குவதாகும், 'அருச்சனை' என்பது எனக்குப் பாட்டுதான். ஆதலால், இம் மண்ணுலகத்தில் சொல் லுயர்வு வாய்ந்த தமிழ் மொழியினால் நம்மைப் பாடுவாய் என்று ஆணை தந்தார். வன்றொண்டர், 'நின்குணப் பெருங் கடலை எவ்வாறு அறிந்து எவ்வாறு பாடுவேன்' என்று திகைத்துக் கேட்க, இறைவன், 'முன்பு என்னைப் பித்தன் என்று கூறினமையால் என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்' என்றார். அந்த அருள்வாக்குக் கேட்டு ஆரூரர்,

---

தாயர்கர்ப்பத் தூடனமுந் தண்ணீரும் தந்தருளும்
நேயவுனை யாரே நினையார் பராபரமே.

பித்தா ! பிறைசூடி ! பெருமானே ! அருளாளா !
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் ; மனத்துன்னை
வைத்தாய் ; பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர்
[அருள்துறையுள்
அத்தா ! உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே?

என்று அழகிய திருப்பதிகம் அங்கே அருளிச் செய்தார். இத்தமிழைக் கேட்டுப் பெரிதும் இன்புற்ற இறைவன், இன்னும் இவ்வாறு பற்பல பதிகங்களை நீ பாடிக் கொண்டிருப்பாய் என்று அருள் செய்தார்.

புத்தூர்த் திருமணத்தில் மணமகளாய் விளங்கிய மாது, திருநாவலூரரையே ஓயாது நினைத்துக் கொண்டிருந்து, சில நாளில் இறைவன் அருளுலகு அடைந்தார்.

வன்றொண்டப் பெருந்தகையார் இங்ஙனம் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற பின், திருநாவலூர் சென்று, அங்கிருந்து இறைவன் எழுந்தருளி இருக்கும் பல தலங்களையும் காணப் புறப்பட்டார்.

முதலில் திருத்துறை யூருக்குச் சென்று இறைவனை வணங்கி, ' தவநெறி தந்தருள் ' என்று வேண்டி அதனைப் பெற்றுக் கொண்டார். உடனே, தில்லையின் நினைவு அவருக்கு எழுந்தது. நம்பியாரூரர் யோக பாதத்தை விளக்க வந்த சான்றோ ரானதனால், தடுத்தாட் கொள்ளப்பட்டதும் தவநெறி வேண்டிப் பெற்றார். தில்லையம்பல நகர்வு தவநெறியில் விளங்குவதாதலின், உடனே தில்லையின் நினைவு அவருக்கு எழுந்தது.

திருத்துறையூரி லிருந்து புறப்பட்டுப் பெண்ணையாறு கடந்து திருவதிகையை அடைந்து, அப்பரடிகள் அருள்

விரிந்த மனமொடுங்கும் வேளையில்நா ளுகப்
பரந்த அருள் வாழி பதியே பராபரமே.

பெற்ற இடமாதலின் அத் திருப்பதியை மிதிக்க அஞ்சி, அதன் புறத்தே ஒரு மடத்தில் தங்கிப் பள்ளிக் கொள்ளும் போது இறைவன் திருவடித் தீக்கையும் பெற்றார்.

யாரோ தலையில் கால் வைப்பதாக முதலில் நினைந்து பின்பு உண்மை தெரிந்த நிலையில், 'தம்மானை அறியாத சாதியார் உளரே' என்று உருக்கத்துடன் பாடினார். 'தலைவனை அறிந்து கொள்ளாத மக்களை என்னென்பது? அந்த இனத்திற் சேர்ந்தவனாக ஆகிவிட்டேனே' என்று அவர் இரக்கங் கொண்டார்.

யோக நிலைக்குரிய இச் சிறப்புக்களைப் பெற்றபின், ஆரூரர் அங்குள்ள கெடில நதியில் திளைத்தாடி, திருமாணிகுழி திணைநகர் என்னும் தலங்களை வணங்கிக் கொண்டு தில்லையை அடைந்தார். தில்லையம்பதி ஆகாசப் பதியாதலால், ஆகாச ஒலிகள் நிறைந்த தில்லை என்று சேக்கிழாரடிகள் விளக்கினர்.

நரம்புடையாழ் ஒலிமுழவின் நாதஒலி வேதஒலி
அரம்பையர்தம் கீதஒலி அருந்தில்லை மருங்கணைந்தார

என்பது அவர் வாக்கு.

யோகசிந்தை மறையோர்கள் நிறைந்த தில்லையிற் சென்று, திருச்சிற்றம்பலத்தை அடைந்து திருக்களிற்றுப் படி அருகு நின்று,

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள,
அளப்பரும் கரணங்கள் நான்கும
சிந்தையே ஆக, குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக,

சிந்தனைபோய் நானெனல்போய்த் தேக்கஇன்ப மாமழையை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே.

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்,
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

இறைவனை வணங்குவோர், இங்ஙனம் புலன்களும், அந்தக்கரணங்களும், குணங்களும் ஒருமைப்பட்டு இறைஞ்சும் பேறு பெறுதலே சிறந்தது. உருக்கமுடையவர்கட்கு, திருவருள்சார்பு உடையவர்கட்கு இவ்வாறு தான் நிகழும். நம்பியாரூரர், 'நின் திருநடம் கும்பிடப் பெற்று மண்ணிலே வந்த பிறவியே எனக்குச் சிறந்தது, இன்பமானது' என்று போற்றிக் கூறி ஆனந்த அருவிநீர் சொரியப் பதிகங்கள் பாடிப் பரவினர். அந்நிலையில், 'திருவாரூருக்கு வருக' என்று ஓர் ஒலி வானில் எழுந்தது.

அவ்வாணையை ஏற்றுத் தில்லையைப் பிரியாது பிரிந்து கொள்ளிடத் திருநதி கடந்து, திருக்கழுமலம் என்னும் சீகாழிப் பதியை அடைந்தார். அது திருஞானசம்பந்தர் அவதாரம் செய்த திருப்பதியாதலால் அதனையும் மிதிக்க அஞ்சி வலமாக வந்து, அவ்வழியிடையே இறைவன் திருக்காட்சி பெற்றுப் பின் திருக்கோலக்கா, திருப்புன்கூர் என்னும் திருப்பதிகளையும் அடைந்து தமிழ்ப் பாடிக் காவிரியின் கரையை அணைந்தார்.

அணைந்தவர் அதனிற் படிந்தாடி, திருமயிலாடுதுறை முதலிய திருப்பதிகளைத் தொழுதுகொண்டு திருவாரூரை அடைந்தார்.

எல்லாம் வல்ல இறைவன், 'ஆரூரன்' நாம் அழைக்க வருகின்றான்; நீவிர் மகிழ்ந்து எதிர் கொள்வீர்' என்று

என்றுங் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொல்
சென்றசென்ற திக்கனைத்துஞ் செல்லும் பராபரமே.

அங்குள்ள அடியார்க்கு அறிவிக்க, 'அப்படியானால் நம்பி யாரூரர் நமக்கும் பிரானே' என்று அவ்வூர் அடியவர்கள் அன்பு மீதூர்ந்து,

மாளிகைகள மண்டபங்கள் மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளின் நெடுந் தோரணமும் தழைக்கமுகுங் குழைத்தொடையும்
நீளிலைய கதலிகளும் நிறைந்தபசும் பொற்கும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயில் தொறும்நிரைத்தார்.
சோதிமணி வேதிகைகள் தூநறுஞ்சாந் தணிநீவிக்
கோதில் பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதிவர்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகள்நுண் துகள் அடங்க விரைப்பனிநீர் மிகத் தெளித்தார்.
மங்கலகீ தம்பாட மழைநிகர் தூரியம் முழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறும் நடம்பயில
நங்கள் பிரான் திருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயில்நீள் திருவாயில் புறம்உறவந் ததிர்கொண்டார்

வன்றொண்டர், 'அடியேனை அழைத்து ஆட்கொள்ளும் எந்தை இருப்பது இத்திருவாரூர்!' என்னும் உருக்கத்துடன் இறைவன் திருக்கோயிலை அடைந்து, ஊனும் உயிரும் உருகும் அன்பாற் பெருமானை இறைஞ்சி இன்னிசைத் தமிழ் மாலை பாடினார். அங்கே ஓர் வாக்கு, 'நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தனம்; நீ இங்கே திருமணக்கோலம் பூண்டு இன்புற்றிரு' என்று எழுந்தது. அது முதல் நம்பியாரூரர் 'தம்பிரான் தோழர்' என்னும் பெயர் பெற்றார். தல வேந்தராகிய அவர், தெய்வ மணிப் புற்றுளாரை நாடோறும் வணங்கித் தொழுது திருப் பதிகங்கள் பாடி வருவாராயினர். (தொடரும்)

ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே.

ஆத்ம போதம்

(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன், மாதுங்கா)

234-ஆம் பக்கத் தொடர்ச்சி

நான் திகைப்படைந்து முழிப்பதைக் கண்டதும் அவள் சற்றே புன்முறுவலித்தாள். அது எனக்கு கோடிக் கணக்காகப் பூத்துக் குலுங்கும் மல்லிகைப் புஷ்பங்களின் ஒளியை ஞாபக மூட்டிற்று. அவள் முகத்திற்கு முன் தான் தோற்றுவிட்டோமென்று கலங்கி முகத்தைத் தொங்கப் போட்டாற் போல், அவள் கொடி போன்ற அழகிய கைகளில் ஒரு அலர்ந்த தாமரைப் புஷ்பம் தொங்கிக் கொண்டிருந்தது. அவள் கண்ணழகு கண்டு கரையடுத்த காவேரியில் துள்ளி யோடி விளையாடிய கயல் கூட்டங்களும் வெட்க முற்று தண்ணீரில் சென்று ஒளிந்து கொண்டதையும் நான் காணாமலில்லை. மிகுந்த ஆணவத்துடன் கீழ்த் திசை வானில் கம்பீரமாகப் பவனி வரக் கிளம்பிக்கொண்டிருக்கும் மதியும், இந்தக் காட்சி கண்டு எங்கே அவள் தன்னை ஏசப் போகிறாளோ என வெட்கி பயத்தால் பாண்டு பிடித்தவன் போலானான். அவள் நின்றிருந்த காட்சி எனக்கு நல் முத்துக்களாகிய புஷ்பங்கள் பூக்கும் ஒரு பொன் கொடி மரகதப் போர்வை போர்த்தி யிருப்பது போலும், அடர்ந்த கருமேகக் கூட்டங்களாய விருக்ஷங்கள் செறிந்த நந்தவனத்திலே, கண்ணை அள்ளிப் பறிக்கும் மின்னல் புஷ்பங்கள் பூத்திருப்பது போலும் தோன்றின. 'சல் சல்' என சப்திக்கும் பாதங்களின் நூபுரத்வனி யாரோ எங்கிருந்தோ ப்ரணவத்தை ஸ்வரமாக ஓதுவது போல் இருந்தது. காதில் மின்னிய மகர குண்டலங்கள் செம்

பொன் மோதிரத்தில் பதிக்கப்பட்ட இரு நீலக் கற்கள் போன்ற ஒளி வீசின. இவ்வளவும் ஒரு கணமே. மறு இமைப் பொழுதிலோ மனதில் காணுதனதைக் கண்டு விட்டது போன்ற ஒரு வித கரை காணு ஆனந்தம், அச்சம், திடீரென்று ஒரு அபூர்வப் பொருளைக் காண்பதா லுண்டாகும் மயக்கம், சரியாக புரிந்து கொள்ள முடியாத தால் உண்டாகும் ஸ்வபாவமான சந்தேகம், யாரேனும் பார்த்து நகைத்தால் என் செய்வது என்ற இனம் தெரியாத வெட்கம் போன்ற பல்வேறு உணர்ச்சிகள் போட்டி போட்டுக் கொண்டு எழுந்தன. இது தனக்குத் தெரிந்துவிட்டது போல் அவளே முதலில் பேசலுற்றாள்.

வத் , நீ அழைத்தாய் என்று தானே மனமுவந்து ஓடோடியும் வந்தேன். நான் வந்த பின்னும் ஏன் இந்த வீண் தயக்கம்! ஏன் வீணே கலங்குகிறாய் !. கண்ணே, வா! என் அருகில் வா!' என்று அன்புடன் அழைத்தாள்.

ஆம், இத்தனை நாட்களாக எதைக் காணத் தவியாய்த் தவித்து நெஞ்சமெல்லாம் புண்ணாக வெந்து வெதும்பிக் கொண்டிருந்தேனோ, யாரைக் காணாத காரணத்தினால் என் மனம் பாகாய் உருகி சுத்த சூன்யமாய் விட்டிருந் ததோ, பசுவைக் காணாத கன்றைப் போல் யாரைத் தேடி இது காறும் அம்மா! அம்மா! என்று தீனக் குரலில் கதறிக் கொண்டிருந்தேனோ, அவளே இப்பொழுது என் முன் நின்று கொண்டு என்னை அன்புடன் வா என்று அழைக்கிறாள். ஆ! இந்த ஆனந்தத்திற்கு ஈடுமுண்டோ! என் கனவு பலித மாயிற்று. என் தவம் பலித்தது. என் பயம் துலைந்தது. ஓடோடியும் சென்றேன். அவள் கால் களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அம்மா! என்று

பரலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே.

கத்தினேன். இது காறும் சிரமத்துடன் அடக்கி வைத்திருந்த துக்கத்தை ஒரு நிமிஷத்தில் சொல்ல விரும்புபவன் போல், உள்ளே இருந்த துக்கம் அனைத்தும் கண்ணீர் ஆருகப் பீறி வெளி வந்து, அவள் பாதங்களைக் கழுவி, காவேரியில் கலந்தது. என் நிலை கண்டு பரிதாபமடைந்த அவள் என்னைத் தொட்டெழுப்பினள். இது வரை பயங்கரமாக அழுத்திக் கொண்டிருந்த ஹ்ருதய பாரமெல்லாம் குறைந்து விட்டது போன்ற ஒரு லேசான உணர்ச்சி தோன்றி நீண்ட ஒரு பெரு மூச்சு விட்டேன். என் அளவு கடந்த நன்றி உணர்ச்சியையும், நமஸ்காரங்களையும் தெரிவிக்க வகை யறியாது லேசாகப் பெருமிதத்தால் முறுவலித்தேன். கண்டதும் பேச வேண்டும் என்று வெகு காலமாக நான் சேகரித்து வைத்திருந்த சொல் மூட்டைகள் அவிழ மறுத்தன. சொல்ல வேண்டியதை மறந்து பலங் குன்றி செயலற்றிருந்தேன். அவளை நேரே நிமிர்ந்து பார்க்கக்கூட தைரியம் வரவில்லை. கண்ணீர் வெள்ளம் ஆருகப் பெருக, பக்தி காரணத்தினுல் அஞ்சலி செய்ய கூப்பிய கரங்களுடன், மனதில் அன்பென்னும் இன்பத்தேன் சொரிய, தலை நன்றியால் தானே வணங்க, உடலெங்கும் ஆனந்த மயிர்க்கூச்செடுக்க, சந்தோஷ மிகுதியால் நா தழுதழுக்க மிக்க தடுமாற்றத்துடன் கூறினேன்.

'அம்மா, இது காறும் என்னை ஏங்கவிட்டு நீ எங்கே சென்று மறைந்திருந்தாய்? சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தாற் போலும், சுவையுள்ள பாலுடன், கொம்புத் தேன் கலந்தாற் போலும் உன் தெரிசனத்திற்கு தவித்துக் கொண்டிருந்த எனக்கு, இன்பவாரிதி

உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்தார் போல்திரியுந்
தொண்டர்வினை யாட்டே சுகங்காண் பராபரமே.

யில முழுகடிக்கும் உன் ஆனந்த தெரிசனம் கிடைத்தது மல்லாமல், 'கண்ணே, கலங்காதே, அருகே வா' என அழைத்த சொற்கள் இன்பச் சுவை தந்து இன்பமாய் இன்றும் செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. இத்தனை பெரிய, கிடைக்கக் கூடாத லாபம் இருக்கையில், பின் ஏன் என் மற்றைய ஸோதரர்களாய உலக மாந்தர் வேறு வழிகளிலே சுகம் பெறக் கருதி, புலன்களை அதன் வழியே ஓடவிட்டு, ஆசைகளை அடக்க ஆண்மை யில்லா மல் அற்ப சுக வாழ்வில் அமுத மெனப் புகுந்து அல்லல் படுகின்றனர்? நீ என் தாய் போல் அவர்களுக்கும் தாயே யல்லவா? பின் ஏன் எங்களைப் பிரித்துவிட்டு எங்கள் துன்பத்தைக் கண்டு இன்ப முறுகிறாய்? உண்மையில் நீ யார்? உன் உண்மை ஸ்வரூப மென்ன? உன்னை அடைய எளிய வழிதான் என்ன? உன் தெரிசனம் காண காடு, மலை, குகை யெல்லாம் அலைந்தேன். பித்தன் போல் வாயில் வந்ததெல்லாம் உளறினேன். அன்னாகார மில்லாது பல தினங்கள் தவம் கிடந்து பார்த்தேன். நீ ஏன் இது காறும் வரவில்லை? என் மனம் ஏன் இன்னும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது?

அம்மா! நான் உன் குழந்தை. என்னை மீண்டும் மீண்டும் சோதித்து வேடிக்கை பார்க்காதே. மரத்தில் கட்டப்பட்டிருப்பது யானையே யானாலும், கயிற்றி னளவுக்குச் சுற்றிச் சுற்றி வந்து கடைசியில் நிழலுக்கு மரத்தினடிக்கே வரவேண்டுவது போல், நீ கொடுத்த விளையாட்டுப் பொம்மைகளாய உலக சுகங்க ளெல்லாம் அலுத்துப்போய் உண்மையில் பசி யெடுக்கும் இவ் வேளை யில், இவ்வேழை உன்னைத் தஞ்சம் எனப் புகுந்தேன்.

கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒரேவழியே எந்தாய் பராபரமே.

தள்ளாது காப்பாற்றுவது உன் கடமை' என்றெல்லாம் உள்ளத்தில் உணர்ந்ததெல்லாம் உளறினேன்.

(தொடரும்)

முருகப்பாசாரி

தணிகை மணி வ. சு. செங்கல்வராய பிள்ளை

முருகப்பாசாரி யார்? தெய்வங்களைப் பற்றிய அமுத வசனங்கள் அடங்கிய அமிர்த வசனியில் ஒரு ஆசாரியைப் பற்றி ஏன் எழுத வேண்டும் என நீங்கள் அஞ்சுகின்றீர்களோ? அஞ்ச வேண்டாம், அஞ்ச வேண்டாம். அருணகிரிநாதரின் திருவாக்கின்படி நம்மை ஆட்கொண்டருளும் முருகவேள் தான் முருகப்பாசாரி. ஆசாரிகளுள் அவரவர் தொழிலின்படி, தட்டார ஆசாரி, கன்னா ஆசாரி, தச்ச ஆசாரி என சில வகைப்படுவர். இவர் தம்முள் முருகவேள் ஒரு தச்ச ஆசாரியாம். தச்சு வேலை செய்யும் ஆசாரிக்கு மரத்தில் எவ்வித வேலை செய்யும் திறமையும் வேண்டும். சித்திர வேலைகள், பதுமைகள் முதலிய பல சிறந்த வேலைப்பாடுகளில் வல்லவனாயும் இருக்க வேண்டும்; அதுமட்டுமல்ல. இன்ன மரம் இன்ன வேலைக்கு நன்கு உதவும்; இன்ன மரத்தில் செல் ஏறாது; இன்ன மரம் எக்காலத்திலும்—நீரிற் கிடந்தாலும் வேறு எக்காரணத்தாலும்—மக்கிப் போகாது என்றெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். நமது முருகப்பாசாரியின் திறமையை அருணகிரிநாதர் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் பார்ப்போம்; தச்சு வேலைக்கு உரிய உளி, வாள், சிற்றுளி முதலிய

காயநிலை அல்லவென்று காண்பார் உறங்குவரோ
தூயஅருட் பற்றுத் தொடர்வார் பராபரமே.

எல்லா ஆயுதங்களின் வேலைகளையும் அவர் வேல் ஒன்றே செய்ய வல்லதாம். அவர் வேலுக்கு என்று எடுத்துக் கொண்ட மரம், எக்காலத்திலும் மக்கிப் ' போகாத (அழியாத) 'சூர்' என்கிற கப்புங் கிளையும் நிறைந்த மாமரமாம். இந்த மாமரத்தை வேல்கொண்டு பிளந்தார், அரிந்தார்; அரிந்த பிளவுகளி னின்றும் இரண்டு உருவங் கள் செய்தார்; ஒன்று மயில், ஒன்று சேவல். இம் மயிலும் சேவலும் வெறும் மரப் பொம்மைகள் அல்ல; அவைகளை ஆக்கிய ஆசாரியும் வெறும் தச்ச ஆசாரி அல்ல. அந்த ஆசாரி ஒரு சித்தரு மாவார்; ஆதலால் அவர் ஆக்கிய மயிலும் சேவலும் உயிர் உள்ளனவாய்ச் சித்தி பெற்றவை களாய் இன்றும் விளங்குகின்றன என்றெல்லாம் அருணகிரியார் கீழ்க் காட்டிய திருப்புகழ் அடியில் விளக்கி யுள்ளார்:

"எக்காலும்*மக்காத சூர்க் கொத் தரிந்த சினவேலா!
தச்சா! மயிற் சேவ லாக்கிப் பிளந்த சித்தா!
[திருப்புகழ் 737]

(*மக்காத - மக்கிப்போகாத - கெடாத.)

பின்னும், இம் முருகப்பாசாரி எந்த ஆசாரியின் மகனார் என்பதையும் அருணகிரியார் கூறியுள்ளார். வேத ஆசாரி ஆகிய பிரமனும், மாலும் கருதித் துதிக்கும் ஆகம ஆசாரியும், பொன் மலையை வில்லாக வளைத்து விண்ணில் நடம்புரி ஆசாரியும், யாவராலும் பூசிக்கப்படும் ஆசாரியும், பலதிறத்த எல்லா வகையான கூத்து நடனங்களை ஆட வல்ல ஆசாரியும், கயிலை மலையில் வாழ்பவருமான நடன

அப்பும் உப்பும்போன்ற அயிக்யபரா னந்தர்தமக்
கொப்புவமை சொல்லவும் வாய் உண்டோ பராபரமே.

ஆசாரியரே இந்த முருகப்பாசாரியின் தந்தையாம். இங்ஙனம் முருகப்பாசாரி ஒரு பெரிய இடத்துப் பிள்ளையாகின்றாராதலின், அவர் கருணை மேருவாம்; தேவர் பெருமாளும் என விசேடித்துத் தமது ஞானபோதக ஆசாரியாராம் முருகனைக் கீழ்க் காட்டியவாறு அருணகிரியார் துதித்து மகிழ்கின்றார். நாமும் அதைப் படித்து மகிழ்வோமாக:

“ வேத ஆசாரியனும் மாலும், கருதும் ஆகமாசாரி
கனக கார்முகாசாரி, ககன சாரி, பூசாரி,
வெகுசாரி
கயிலை நாடகாசாரி சகலசாரி வாழ்வான
கருணைமேரு வேதேவர் பெருமாளே
(திருப்புகழ் 1052)

(வாழ்வு - மகன்)

அருணகிரியார் நவரச நாவலர் ஆயிற்றே; மேற் காட்டிய 737-ஆம் பாடற் பகுதி ஹாஸ்ய ரசம்; நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாம்.

வா. சு. செங்கல்வராய பிள்ளை
5—5—1952.

கதிர்காம யாத்திரை

திருவிழாக் காட்சிகள்

(253-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி. வா. ஜகந்நாதன்

கதிர்காமத் திருக்கோயிலில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெளிவாகத் தெரியாது. ஒரு காலத்தில் இந்தக்

சித்தந் தெளிந்து சிவமானே ரெல்லோர்க்குங்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே.

கோயிலைப் பூசிக்கும் தொண்டை ஹிந்துக்களே செய்து வந்த தாகச் சிலர் கூறுகிறார்கள். சிதம்பர ரகசியம் போலக் கதிர்காம ரகசியமும் இருக்கிறது :

உள்ளே மிக விலை உயர்ந்த மாணிக்கத்தா லாகிய முருகன் திருவுருவம் இருக்கிறதென்று சிலர் கூறுகின்றனர். தக்ஷிண கைலாச புராணம் என்னும் நூல் இந்தத் தலத்தைப் பற்றி வருணிக்கும்போது, இந்திர நீல மணியினால் செய்த சிங்கா தனத்தில் முருகன் எழுந்தருளி யிருக்கிறான் என்று தெரிவிக்கிறது. அருணகிரிநாதர் திருப்புகழில்,

'கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிர காமத்தில் உறைவோனே'

என்று பாடுகிறார்.

இவற்றை யெல்லாம் பார்க்கும்போது இங்கே மிக விலை உயர்ந்த பொருளால் ஆகிய முருகனுடைய திருவுருவம் இருந் திருக்க வேண்டும் என்றே தெரிகிறது. தமிழ் நாட்டில் பல பழைய தலங்களில் இன்னும் விலையுயர்ந்த மணிகளால் ஆகிய லிங்கங்களையும் ஆபரணங்களையும் காணலாம். அவ்வண்ணமே இங்கும் முருகனுடைய திருவுருவம் மிக்க விலையுயர்ந்த மாணிக் கத்தால் அமைந்திருக்க நியாயம் உண்டு.

மாணிக்கவேல் இருக்கிறது என்றும் அதனையே பெட்டியில் வைததிருக்கிறார்கள் என்றும், யந்திரம் இருக்கிறதென்றும் அந்த யந்திரத் தகடே பெட்டியில் இருக்கிறதென்றும், அதனுடைய சக்தியால்தான் இத்தலத்துக்கு இத்தனை மகிமை ஏற்பட்டிருக்கிற தென்றும் கூறுபவர்கள் உண்டு.

காட்டுக்கு நடுவே இத்தலம் இருத்தலினால் பக்தி உள்ளவர்கள் கூட்டம் கூட்டமாகவே வந்து தரிசித்துப் போயினர். மற்றச் சமயத்தினர்கள் இங்கே விலை உயர்ந்த பொருள்கள் இருக்கிற தென்றெண்ணி அதைக் கொள்ளையடிதது எடுத்துச் செல்லவும் துணிந்தார்களாம். சில போர்த்துக்கீசியர்கள் இந்தக் கோயி

லுக்குக் கொள்ளை யடிப்பதற்காக வந்தபோது, அவர்களுக்கு வழிகாட்டி வந்தவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம். இதை ஒரு போர்த்துக்கீசியரே எழுதியிருக்கிறார்.*

'காட்டுக் கிராமம்' என்ற நாவலை லியனார்ட் வுல்ப் (Leonard Woolf) என்றவர் எழுதி யிருக்கிறார். இலங்கையில் காட்டினிடையே வாழ்ந்த ஒரு குடும்பத்தைப் பற்றிய கதை அது. அதனிடையே அந்தக் குடும்பத்தினர் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றதாக ஒரு பகுதி வருகிறது. கதிர்காமத்தைப் பற்றித் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் இணைத்து அந்தப் பகுதியை ஆசிரியர் எழுதியிருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. அந்தப் பகுதியில் சில இடங்கள் வருமாறு.

* * *

"அடுத்த நாள் காலையில் அவர்கள் மகாபட்டணத்தை விட்டுச் செல்லவேண்டி யிருந்தது. மறுபடியும் காட்டினிடையே பிரயாணம் செய்து துன்புற நேர்ந்தது. இரண்டு நாட்கள் முள் நிறைந்த காட்டினூடே நடக்க வேண்டி யிருந்தது; இடையில் வெயிலுக்கு ஒதுங்க நிழலே கிடையாது. வரவர வழி கல்லும் பாறையும் நிறைந்ததாக இருந்தது. அங்கங்கே புதர்களும் அவற்றினிடையே குண்டுக் கற்களும் இருந்தன. மரங்களுக்கிடையே உயர்ந்து நின்ற பாறைகளும் இருந்தன. முதல் நாள் பிற்பகலில் பேரகமக் குன்றத்தை நெடுந் தூரத்திலிருந்து கண்டார்கள். கோயிலுக்கு மேலே மூன்று சிகரங்களை உடையதாக அது நின்றது. அடுத்த நாள் மாலை அவர்கள் குன்றத்தைச் சார்ந்த காட்டை அடைந்தார்கள். அது அடிவாரத்திலிருந்து குன்றின் உச்சி வரையில் படர்ந்திருந்தது.

"மறுபடியும் திடீரென்று காடில்லாத இடம் வந்தது. ஓர் ஆற்றின் கரையை அடைந்தார்கள். கரைகளில் பெரிய மருத மரங்களும் அத்தி மரங்களும் அடர்ந்திருந்தன. வெயில்கால மாகையால் ஆற்றின் நடுவில் கொஞ்சந்தான் நீர் ஓடிக்கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் மணற் பரப்பு இருந்தது. ஆற்றில் அங்கங்கே யாத்திரிகர்கள் தங்கள் உடலழுக்கையும் உள்ளத்

* கதிர்காமம்—குல. சபாநாதன் எழுதியது. ப. 23.

தழுக்கையும் போக்கிக் கொள்ள நீராடிக் கொண்டிருந்தார்கள். இவர்களும் அவர்களைப் பார்த்து நீராடினார்கள். வெள்ளாடை உடுத்துக் கொண்டு ஆற்றுக்கு அக்கரையை அடைந்து ஊருக்குள் போனார்கள்.

'நீளமும் அகலமுமான ஒரு தெருவில் அவர்கள் புகுந்தார்கள். தெருவின் இரு புறங்களிலும் வீடுகளும் மடங்களும் இருந்தன. மடங்கள் யாத்திரிகர்கள் வந்து தங்க வசதியானவை. தெரு முழுவதும் அடியார்கள் நிறைந்திருந்தனர். சிலர் சும்மா நின்று கொண்டும், சிலர் கடைகளில் பண்டங்களை வாங்கிக் கொண்டும், சிலர் கோயிலுக்குப் போய்க் கொண்டும் இருந்தார்கள். கோயிலிலிருந்து ஸ்வாமி வெளியில் எழுந்தருள வேண்டிய சமயம் அது. அங்கே திருவிழா பதினைந்து தினங்கள் நடக்கும். ஒவ்வொரு நாளும் கடவுள் திருவீதியில் எழுந்தருளுவார். பௌர்ணமியன்று உற்சவத்தின் கடைசி நாள். அன்று மிகவும் விசேஷமாக இறைவன் பவனி நடைபெறும். அதற்கு மறுநாள் கோயில் பூஜை செய்யும் கப்புராளை ஆற்றுக்குச் சென்று நீராடுவார். அப்போது அடியார்களெல்லாம் அவருடன் சென்று ஸ்நானம் செய்வார்கள். ஆற்றில் பொற்கத்தியினால் நீரைக் கீறுவார் பூசாரி.

'தெருவின் இரு மூலையிலும் கோயில்கள் இருந்தன. வட மூலையில் இருந்த கோயில் பேரகமத்தெய்யோ (கதிர்காம முருகன்) வினுடையது. தேவாலயம் சிறியது. அதன் ஒரு பக்கத்தில் விமானம் இருந்தது. அதன்மேல் பல தெய்வங்களின் திருவுருவங்கள் அமைந்திருந்தன. ஹிந்துக் கோயில்களில் இப்படிக் கோபுரமும் அதில் சிற்ப உருவங்களும் இருக்கும். கோயிலைச் சுற்றிப் பெரிய முற்றம் இருந்தது. அதைச் சூழச் செங்கல்லால் அமைந்த திருமதில் இருந்தது. மதிலுக்குப் புறம்பே கீழ்த் திசையில் மற்றொரு சிறிய கோயில் இருந்தது; அது கடவுள் திருமணம் செய்துகொண்ட தேவியின் திருக்கோயில். (தேவயானை கோயில்). வீதியின் தென் கோடியில் மற்றொரு கோயில் உண்டு.

விண்ணுக்கும் விண்ணாகி மேவும்உனக் கியான்பூசை
பண்ணிநிற்கு மாறு பகராய் பராபரமே.

அது சதுரமான கோயில். குப்பைகூளம் நிறைந்ததாக இருந்தது. அதற்கு முற்றமோ மதிலோ இல்லை. அதைச் சுற்றித் திண்ணையிருந்தது. அதில் கண்டகண்ட சாமான்களெல்லாம் கிடந்தன. யாத்திரிகர்கள் அங்கே தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கோயிலுக்கு ஒரே ஒரு வாசல். அதில் ஒரு திரை கட்டியிருந்தார்கள். அந்தத் திரையில் கடவுளின் திருவுருவம் இருந்தது. கப்புராளையரைத் தவிர வேறு யாரும் திரையைத் தாண்டி உள்ளே போகமுடியாது. அந்தக் கோயில் கடவுளுடைய காதற் கிழத்தியினுடையது. (வள்ளியம்மை திருக்கோயில்).

'இங்கே காட்டினிடையே வாழும் தமிழ்க் கடவுள் யார்? தமிழர்கள் இந்தப் பெரிய கடவுளைக் கந்தசாமி என்று வழங்குகிறார்கள். இங்கே வாழும் புத்தர்கள் அக்கடவுளை அறிந்து கொண்டவர்களாகச் சொல்கிறார்கள். மரங்களிலும் காடுகளிலும் உள்ள பேய் பிசாசுகளை அவர்கள் அறிவார்கள். அவைகளோடு அந்தக் கடவுளும் இருக்கிறாராம். ஒரு காலத்தில் முன்னே சொன்ன பெரிய குன்றத்திலுள்ள மூன்று சிகரங்களில் நடுச் சிகரத்தில் இந்தக் கடவுள எழுந்தருளி யிருந்தாராம். கடலளவும் பரந்து கிடக்கும் காட்டையும் மலையையும் ஆட்சி புரிந்து வந்தார். அதனால்தான் உற்சவத்தில் ஒவ்வொரு நாளும் அந்தச் சிகரத்தில் நெருப்புச் சோதி விடுகிறதாம். ஒருநாள் குன்றத்தின்மேல் அப்பெருமான் வீற்றிருந்து, கீழே ஓடிய ஆற்றையும் மரங்களையும் பார்த்தார். ஆற்றுக்கு அக்கரையில் உள்ள சமவெளியில் சென்று தங்கவேண்டுமென்ற திருவுள்ளம் பூண்டார். அந்தக் காலத்திலும் அவர் தமிழ்க் கடவுளாக இருந்தார். ஆகவே அந்தப் பக்கம் வந்த தமிழர்களை அழைத்துத் தம்மை ஆற்றின் அக்கரைக்கு எடுத்துச் செல்லும்படி பணித்தார். தமிழர்கள், 'எம்பெருமானே, நாங்களெல்லாம் ஏழைகள். நெடுந்தூரம் காடும் மேடும் கடந்து கடற்கரையிலுள்ள உப்பங்கழியில் உப்பெடுக்கப் போகிறோம். இப்போது இங்கே தங்கினால் மழை வந்து உப்பைக் கரைத்து விடும். நாங்கள வந்த காரியம் வீணாகிப் போகும். ஆகையால்

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

எங்கள் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்புகாலில் தேவரீரை எடுத்துச் சென்று ஆற்றுக்கு அக்கரையில் பிரதிஷ்டை செய்வோம்' என்றார்கள். இப்படிச் சொல்லிவிட்டு அவர்கள் போய் விட்டார்கள். அவர்கள் தம் ஏவலைப் புறக்கணித்ததனால் கடவுளுக்குக் கோபம் மூண்டது. சிறிது நேரம் கழித்துச் சிங்களவர்கள சிலர் ஒரு கூட்டமாக வந்தார்கள். அவர்களும் உப்பங்கழியில் உப்பெடுக்கத்தான் போய்க் கொண்டிருந்தார்கள். கடவுள் அவர்களை அழைத்துத் தம்மை ஆற்றின் அக்கரைக்கு எடுத்துச் செல்லும்படி சொன்னார். அவர்கள் குன்றத்தின்மேல் ஏறிக் கடவுளை எடுத்துக் கொண்டு கீழிறங்கி ஆற்றைக் கடந்து சென்று அக்கரையில் மரங்களின் கீழ், இப்போது கோயில் உள்ள இடத்தில் வைத்தார்கள். அப்போது கடவுள் இனிமேல் தம்மைத் தமிழர்கள் பூசை செய்யக் கூடாதென்றும், சிங்களவர்களே செய்யவேண்டு மென்றும் கட்டளையிட்டார். அதனால்தான் இந்தக் கடவுள் தமிழ்த் தெய்வமாக இருந்தாலும், கோயில் ஹிந்துக் கோயிலாக இருந்தாலும் இங்குள்ள பூசகர்கள் பௌத்தர்களும் சிங்களவர்களுமாக இருக்கிறார்கள்.

'ஆகவே இந்தக் கடவுள் காட்டுத் தெய்வம். பெரிய பூதகணநாதர்; தக்க முறையில் அணுகி வழிபட்டால் அருள் செய்வார். கோயிலைச் சுற்றியுள்ள அமானுஷ்யமான காடு முழுவதும் இவர் ஆணை பரந்திருக்கிறது. பக்தர்கள் இந்தக் கடவுளின் மேல் ஆணையிடுவார்கள். பொய்யாக ஆணை யிட்டால் கடவுள் அவர்களைத் தண்டிப்பார். நோயாளிகளும் மலடிகளும் பேயாற் பிடிக்கப் பட்டவர்களும் இங்கே பிரார்த்தனை செய்வார்கள்.

'அடியார்கள் உற்சவ காலத்தில் கூட்டம் கூட்டமாக வந்து இந்தக் கடவுளை வழிபடுவார்கள். கடவுள் ஒரு மானைக் காதலித்துத் தம் காதலியாக்கிக் கொண்டார். தெருவின் தென் கோடியில் உள்ள கோயிலில் அந்தக் காதலியை இருக்கச் செய்தார். உற்சவத்தில் பதினைந்து நாட்களிலும் ராத்திரியில் கப்புராளைகள் கோயிலுக்குள் சென்று ஒரு பெரிய கறுப்பு ஆடையால் கடவுளை

கெட்டவழி ஆணவப்பேய் கீழாக மேலான
சிட்ட ருனைப் பூசை செய்வார் பராபரமே.

மூடி எடுத்து வருவார்கள். யாரும் அவரைப் பார்க்கக் கூடாது. யானையின் மேல் கடவுளை வைப்பார்கள். அடியார்கள் ஆண்டவர் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். தங்கள் தலைமேல் கற்பூர தீபம் நிறைந்த பாத்திரங்களை ஏந்திச் செல்வார்கள். ஊர்வலம் வள்ளியம்மை திருக்கோயிலை நோக்கிச் செல்லும். அங்கே கப்புராளைகள் தங்கள் கண்களைக் கட்டிக்கொண்டு கடவுளை யானைமீதிருந்து இறக்கி, மறைத்தபடியே வள்ளியம்மை கோயிலுக்குள் கொண்டு போவார்கள். அடியார்கள் இறைவர் திருநாம கோஷம் செய்வார்கள். பெண்கள் கப்புராளைமாரின் காலில் விழுந்து வணங்குவார்கள். இப்படிச் செய்தால் பிள்ளையில்லாதவர்களுக்குக் குழந்தை பிறக்குமென்று நம்பினார்கள். கப்புராளைமார் கடவுளை வள்ளியினிடம் எடுத்துச் சென்று வைத்துவிட்டுப் போவார்கள். முரசுகள் முழங்கவும் மணிகள் ஒலிக்கவும் எங்கும் விளக்குகளின் சுடர், ஒளிரவும் அடியார்கள் பாடி ஆடிக் களிப்பார்கள்; கீழே விழுந்து வணங்குவார்கள். மறுபடியும் கப்புராளைமார் கண்களைக் கட்டிக்கொண்டு வள்ளியம்மை கோயிலுக்குள்ளே சென்று, கடவுளை மூடியபடியே எடுத்து வந்து யானையின்மேல் வைப்பார்கள். மறுபடியும் தம்முடைய கோயிலை நோக்கிக் கடவுள் எழுந்தருளுவார். அடியார்கள் பின் தொடர்வார்கள்

இவ்வாறு அந்த ஆங்கிலேயர் கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாவை வருணித்திருக்கிறார்.

பல காலமாகவே கதிர்காமம் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதும், மக்கள் இங்கே வந்து வழிபட்டுத் தம் குறை தீர்ந்தார்கள் என்பதும் இந்த வருணனையினால் உணர வேண்டிய செய்தியாகும்.

மாணிக்கத் திருவுருவ முடையவன் இங்கே எழுந்தருளிய முருகன் என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், ஒரு காலத்தில் யாவரும் கண்டு வழிபடும் அற்புதத் திருவுருவம் ஒன்றை

காலிபிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே.

உடையவனுகி முருகன் இங்கே எழுந்தருளியிருந்தான் என்று நம்ப இடமுண்டு. (தொடரும்)

சென்னை தொண்டர் குழாம்

திருவருணை யாத்திரை

'தருமமிகு சென்னை'யில் உள்ள 'அடியார் திருக்கூட்டம்,' 'இறைபணி மன்றம்', 'சிவனடியார் திருக்கூட்டம்', 'ஸ்ரீ அருணகிரிநாதர் சபைகள்' யாவும் ஒன்று சேர்ந்து சுமார் ஐந்நூறு தொண்டர்கள் ஒன்றுகூடி, 29—9—52 திங்கட்கிழமை இரவு 11 மணிக்கு, பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட புகைவண்டித் தொடர் உதவியுடன் திருவண்ணுமலைக்குப் புறப்பட்டனர்.

எழும்பூர் ரயில் நிலையத்திலேயே 'அண்ணுமலைக் கரோஹரா' என்ற அருள் முழக்கத்துடனும் திருப்புகழ் பஜனையுடனும் பிரயாணம் செய்து, 30—9—52 செவ்வாய் காலை அடியார்கள் திருவருணை சேர்ந்தார்கள்.

திருவண்ணுமலையில் உள்ள பிரபலஸ்தர்கள், ரயில் நிலையத்தில், திருவாளர் திருப்புகழ்மணி, இளவழகனுர், திருப்புகழ் சதுரர் இராமலிங்கம்பிள்ளை, ரசபதி முதலியோரையும், தொண்டர்களையும் வரவேற்றனர். குழாம் ஆண்டவன் நாமாவளியுடன், சா. நா. சா. சாதுக்கள் சத்திரத்தை யடைந்தது. சிற்றுண்டி வழங்கிய பின், நாலு ரதவீதிகளில் பாராயண பஜனை நாலு கோஷ்டிகளால் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 12 மணிக்கு யாவரும் கோயில் சென்று இறை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பகல் உணவு முடிந்தபின், ஒருமணி நேரம் சக்தி விலாஸ சபா மண்டபத்தில் திரு. கீழ்வேளூர் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

யவர்களால் சங்கீத விருந்து நடந்த பின், 4 மணிக்கு உயர் திரு. திருப்புகழ்மணி அவர்கள் சொற்பொழிவு ஆற்றுகையில், இத்தகைய தொண்டர் குழாம் பல ஊர்களுக்கும், அயல் நாடுகளுக்கும் சென்று மக்களிடையே இறை உணர்ச்சியை வளர்க்க வேண்டுமென்றார்கள். ரசபதியவர்களும் திருப்புகழ் சதுரர் ராமலிங்கம் பிள்ளை அவர்களும் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். அவ்வமயம் அற்புதமாக மழை ஆரம்பித்தது.

பிறகு உயர்திரு இளவழகனார் அவர்கள் தமது சொற்பொழிவைத் தொடங்கிய சிறிது நேரத்தில், ஆண்டவன் கருணை யுருவான கனத்த மழை, பேச்சாளரை சும்மா யிருக்கும் நிலையை யடையச் செய்தது.

எதிர்பாராதவண்ணம் மின்னி யிடித்துப் பெய்த பலத்த மழையைக் கண்ட யாவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் ததும்பியது. ஆவேசம் மிகுந்து அண்ணாமலைக்கு அரோஹரா எனப் பக்தர்களிட்ட பெருங்கோஷம் மிக்க புளகாங்கிதமாக இருந்தது. பரமனே நிகழ்ச்சிகளை முடித்துக் கொடுத்தார் என்றே சொல்லலாம்.

பக்தர்கள் இரவிலும் கோயில் வழிபாடு முடித்துக் கொண்டு, உணவு அருந்தி, 9 மணிக்கு ரயில் தொடரில் மீண்டும் புறப்பட்டு, 1—10—52 புதன் காலை 4 மணிக்கு எழும்பூர் அடைந்தார்கள்.

வரவேற்பு, பஜனை, சொற்பொழிவு முதலியவற்றில் ஈடுபட்டு, பேரின்ப வெள்ளப் பெருக்கில் மூழ்கிய சென்னை தொண்டர்கள், திருவருணை யாத்திரையையும், தொண்டர்களுக்கு சகல சௌகரியங்களையும் ஏற்படுத்திய திருவருணை நேயர்களின் பேரன்பையும் என்றும் மறக்கமுடியாது.

அன்பர் பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

MOTHER

Man awakens in the lap of the Mother from the stillness of death,—so called. In the morn of life, he recognises Her face in the full-blown lotus, bedecked with many an ornament. The sun, the moon, the stars glorify Her innate beauty. Every flower displays Her gracious smiles—the high heavens glorify Her broad forehead and the blue sky bespeak the dark tresses adoring Her head. The oceans are symbolic of the immensity of Her grace. Lest man—Her child, should drop without Her aid, She is everywhere, within and without. Man feeds and grows on Mother's milk. Her heart is ever green with mother's love and the world is filled with Her heavenly food. All that man eats, the water he drinks, the air he breathes are all full of the essence of life and this life essence is but what the Mother gives. The Mother gives of Her life and body; else man is not. If man reflects the Mother's heart, he is indeed the true son, and she the true daughter. Lord Ramakrishna grew into the divine heart of the Mother. An ungrateful heart can never realise the Mother who is all around. Mother is all in all and she is all busy. She has to attend to Her innumerable children!

The cosmos is Her big house. The innumerable lives are Her family. Will man assist in the Mother's house-keeping? Her gracious look will give the strength and means to serve. Mother is the embodiment of service. Service is life. Hence Mother is all life. Will man serve and live? Mother teaches Her children the secret and purpose of life. Live to serve and serve to live.

Mother takes many forms. She is Sri Durga. Riding on a leopard armed with weapons which bespeak destruction, she invades the heart of man and strives to drive away the vile egotism, the covetousness and greed that would wrest from the Mother more than is good for the child man, the cruelty that revels in the suffering of other Jivas or lives, the desires that spell the annihilation of man and his nobility and all other kindred causes of human suffering. The incorrigibles are taken back into Her being, chastened in the purity of Her loving heart, and sent forth again to play in the wide garden fields of flower and grain, that is, Nature. Think of Mother Kali or Durga. She will drive away all evil thoughts out of the mind and instal Her motherly purity, bless you with the riches of this world and the next and

bestow that Gnana or divine knowledge to see Her, know Her, to become one with Her.

As the purifier of the mind of man, the Mother appears as Sri Durga; as the giver and sustainer of the good things of life and beyond, she appears as Sri Laxmi; as the instructor or guru who bestows divine knowledge she appears as Sri Saraswati. The three forms represent only the one Mother, the triune Mother. May the world prosper in the loving thought of the Mother— DURGA MATHAKI JAI.

ANNA POORNAI SADA POORNAI
SANKORA PRANA VALLABHAI
GNANA VAIRAGYA SIDDHYARTAM
BHIKSHANDHEHI CHA PARVATHI.

Thiruppugal Mani

சோதி யேசுட ரேசுக மேருனை
நீதி யேநிச மேநிறை வேநிலை
ஆதி யேஉனை யானடைந் தேன்அகம்
வாதி யாதருள் வாய்அருள் வானமே.

(தாயுமான சுவாமிகள்)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Page - 364

ஷண்முகம் பிராண்டு

364 ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்
புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd :—1924 Phone :—118

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா

நம நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு, நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras